# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 09 அதிர்வு 98 ஆவணி 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198


## ‘சிதைந்த நிலத்தில் சலங்கை ஒலி’









ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டண்டினொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY

FRESH FINDS GREAT DEALS

INDIAN AND SRILANKAN

# GRACE GROCERY

## INDIAN AND SRILANKAN GROCERY


**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026

# மன்னாரில் நடப்பது என்ன?



● கருணாகரன்

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையிலான புவிசார் பிராந்திய அரசியல் ஆதிக்கப்போட்டியில் இலங்கையின் தென்பகுதியில் சீனாவின் செல்வாக்கு (பிடி) அதிகம். தென்பகுதியைஇழந்து நிற்கும் இந்தியா, வடக்கு - கிழக்கில் தன்னைப்பலப்படுத்துவற்குத் தீவிரமாக முயற்சிக்கிறது.இதற்காக அது திருகோணமலை, காங்கேசன்துறை துறைமுகங்களின் விருத்தி, பலாலி விமானத்தள அபிவிருத்தி, யாழ்ப்பாண கலாசார மைய நிர்மாணம், பல்கலைக்கழங்களுக்கான நிதி அளிப்பு, திருகோணமலை சிவன்கோவில் புனரமைப்பு, மன்னார் - திருக்கேதீஸ்வரம் செழுமையூட்டல் என்று பல உதவித்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இதில் முக்கியமான ஒரு மையம் மன்னாராகும்.

மன்னார்க்கடல் இந்தியாவுக்கு அண்மையாக உள்ளது என்பது மட்டுமல்ல, அந்தப் பகுதியில் எண்ணெய் வளமிருப்பதாகக் கருதப்படுவதும் இந்தியாவின் கரிசனைக்கு ஒரு முக்கிய காரணமாகும். அதோடு அங்கே இல்மனைற் என்ற கனிம வளமும் உண்டு. அதை அகழ்ந்து எடுப்பதற்கான முயற்சிகள் நடக்கின்றன. ஆனால் அது இந்தியாவின் கைகளுக்கு அப்பால் சென்று விட்டதாகச் சொல்லப்படுகிறது. இருந்தாலும் அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

அதைப்போல மன்னார் நிலப்பகுதியிலுள்ள பேசாலை, தாழ்வுபாடு போன்ற பகுதிகளில் காற்றாலை எனப்படும் (WinMin) காற்றாடி மூலம் மின்சாரத்தைப் பெறும் திட்டத்துக்கும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். இந்தத் திட்டம் இந்தியாவின் முதலீடு. ஆனால், இதற்கும் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

மக்களுக்கு இந்தியா, இலங்கை அரசு, சீனா என்பதெல்லாம் பொருட்டே இல்லை. தங்களுடைய வாழ்க்கைச் சூழலே முக்கியம். அது பாதிக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. ஏற்கவும் முடியாது. ஏனென்றால், அது அவர்களுடைய வாழ்க்கையாகும்.

குறிப்பாக உள்ளூர் இயற்கைச் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாகவே இந்தக் காற்றாலைகள் உள்ளன என்று கூறப்படுகிறது. ஆனால், சூழல் பாதிப்புக் குறித்த ஆய்வுகளின் பின்னரே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்று அதிகாரிகள் சொல்கிறார்கள்.

இருந்தாலும் மன்னார்ப் பிரதேச மக்கள் அமைப்புகளும் மக்கள் பிரதிநிதிகளும் தொடர்ந்து போராடியதன் விளைவாக, அரசாங்கத்துடன் பேசக்கூடிய சூழல் உருவாகியது. அதன் விளைவாக தற்போது காற்றாலை மற்றும் இல்மனைற் அகழ்வு ஆகிய திட்டங்கள் இடைநிறுத்தி வைக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இந்தத் திட்டங்களுக்கெனக் கொண்டு வரப்பட்ட உபகரணங்கள் அனைத்தும் பிறிதொரு இடத்தில் களஞ்சியப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே மக்கள் அமைப்புகள் இதனை எதிர்த்துவந்திருக்கின்றன. அதற்குக் காரணங்களும் உண்டு.

1. காற்றாலைகள் சூழலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

2. குறித்த பகுதிகளில் மீன்பிடிக்கு நெருக்கடி ஏற்படுகிறது. காற்றாலைகளின் தாக்கத்தினால் மீன்பாடு குறைகிறது.

3. பறவைகள், மற்றும் தாவரங்கள் பாதிப்பைச் சந்திக்கின்றன.

4. காற்றாலைகள் அமைக்கப்படும் இடங்களில் வெள்ளநீர் பாய்ந்து செல்வதற்கான தடுப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதனால், கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்குகின்றன.

5. காற்றாலை மற்றும் இல்மனைற் அகழ்வு போன்றவை வளச்சுரண்டலே தவிர, அபிவிருத்தி அல்ல. இயற்கை வளங்களைச் சுரண்டிச் செல்லும் உபாயத்தையே அரசாங்கத்தின் அனுசரணையோடு வெளிச்சக்திகள் செய்கின்றன. மற்றும்படி மக்களின் மீதான கரிசனையினால் அல்ல. ஆகவே இதை ஏற்றுக் கொள்ள முடியாது.

6. எத்தகைய திட்டங்களையும் ஒரு பிரதேசத்தில் மேற்கொள்வதாயின் அந்தப் பிரதேச மக்களுடைய நலன் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல, மக்களுடைய ஒப்புதலுடன்தான் அதைச் செய்யவேண்டும். இந்தத் திட்டங்கள் எவையும் அப்படிச் செய்யப்படவில்லை. இவை முந்திய ஆட்சியாளர்கள் பெற்றுக்கொண்ட தனிப்பட்ட நலன்களுக்காக மன்னாரில் திணிக்கப்பட்டவை என்பதாகும்.

மன்னாரில் மட்டுமல்ல, வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்படும் பல திட்டங்களும் இயற்கை வளத்தைச் சுரண்டுவதாக அமைகின்றனவே தவிர, மக்களுக்குப் பயனுடையனவாக இருப்பதில்லை. இவ்வளவுக்கும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் இவை. அது மட்டுமல்ல, கடந்த 40 ஆண்டுகளாக அபிவிருத்தி செய்யப்படாதிருந்தவை.

ஆகவே இந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மக்களுக்கும் பிரதேசங்களுக்கும் பயனுடையவையாக இருக்கவேண்டும். இலங்கை அரசும் சரி, இந்தியாவும் சரி, சீனாவும் சரி இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். மக்களுக்குப் பயன்தராத திட்டங்களை மக்கள் எதிர்த்தே தீருவர். அவர்களுக்கு வேறு வழியில்லை. கிளிநொச்சி மாவட்டத்திலும் இதே போன்றதொரு இயற்கை வளச் சுரண்டலுக்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அது ஜப்பானிய நிறுவமொன்றின் முயற்சி. கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் உள்ள பொன்னாவெளிப் பிரதேசத்தில் சுண்ணக்கல்லை அகழ்ந்து சீமெந்து தயாரிப்பதற்கான திட்டமே அதுவாகும். அதை மக்கள் எதிர்த்ததால் அந்தத் திட்டமும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே மக்கள் போராடியே தங்களுடைய சூழலையும் வளங்களையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. இதற்காக அவர்கள் அரசாங்கத்தோடும் வெளிச்சக்திகளோடும் போராட வேண்டியுள்ளது. நல்லவேளை, ஓரளவுக்கு மக்கள் நிலை நின்று சிந்திக்கக் கூடிய அரசாங்கமாக இன்றை ஆட்சித் தரப்பு இருப்பதால் இந்தளவுக்கு (இடைநிறுத்தம் செய்யும் அளவுக்கு) நடவடிக்கை அமைந்துள்ளது.

இந்தியா இலங்கையின் வடக்குக் கிழக்குச் சூழலையாவது தனக்குச் சாதகமாக வைத்திருக்க விரும்பினால், இந்தப் பிராந்தியங்களில் மக்களுக்குப் பொருத்தமான - மக்கள் நலனை முதன்மைப்படுத்திய முதலீடுகளை மேற்கொள்வதைப் பற்றி சிந்திக்கவேண்டும். அதை விடுத்து, இந்தியாவிலிருந்து திருகோணமலைக்குத் தரைவழிப் பாதை அமைக்கப்போகிறோம், சேது கால்வாயை அகழப்போகிறோம் என்றெல்லாம் கதை சொல்வதில் பயனில்லை.

குறிப்பாக காங்கேசன்துறைத் துறைமுகத்தையும் பலாலி விமான நிலையத்தையும் மேலும் வளப்படுத்தி, மக்கள் தாராளமாகப் பயணம் செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்தினாலே முதற்கட்ட வெற்றி. இப்படிச்சாதகமாகச் செய்யக்கூடிய பல பணிகள் உள்ளன. அதுமட்டுமல்ல, கேரளக் கஞ்சாவைக் கட்டுப்படுத்தினாலே பெரிய புண்ணியமாகும்.

இவை ஒரு புறமென்றால், மன்னாரில் மீன்பிடிக்கவும் அட்டை குளிக்கவும் முடியாத நிலை வேறு வந்துள்ளது. இதைப்பற்றி மன்னார் மீனவர்களே கதைகதையாகச் சொல்கிறார்கள்.

“மன்னாரில் முத்துக் குளித்த காலம் ஒன்றிருந்தது. அது மன்னாருக்குச் சிறப்பானதொரு வரலாற்று முகத்தைப் பெற்றுத்தந்தது. பின்னாட்களில் முத்துக்குளிப்பைப் பற்றிய கதைகள் மட்டும் மிஞ்சினவே தவிர, முத்துக் குளிப்பு இல்லாமல் போய்விட்டது. பிறகு, அட்டை குளித்தோம். இப்பொழுது அதையும் செய்யமுடியாமல் போயிருக்கிறது என்று மன்னாரில் உள்ள ஒரு கடற்தொழிலாளி சொல்கிறார். மேலும் அவர் சொல்லும்போது “அட்டை குளிக்கலாமென ஒருவாரம் சிலாவத்துறையில் போய் நின்றேன். ஒருகாலத்தில் தோணி நிறைந்த அட்டைகளை அள்ளித் தந்த அல்லிராணிக்கோட்டைக் கடலில்தான் இப்போதெல்லாம் ஒன்றிரண்டு அட்டைகளையாவது குளிக்க முடியும். ஆனால் அந்தக் கடலிலும் இறங்கமுடியாது. உள்ளூர் மாஃபியாக்களின் அட்டூழியம்” என்கிறார்.

‘அதென்ன உள்ளூர் மாபியாக்களின் அட்டூழியம்?’ என்று நீங்கள் கேட்கலாம்.

மன்னார்க் கடலில்தான் கேரள கஞ்சாப் பொதிகள் தொடக்கம் போதைப்பொருட்கள் எல்லாம் அதிகளவில் இறக்கப்படுகின்றன. பொலிஸ் மற்றும் கடற்படையினரால் பிடிக்கப்படுகின்ற கேஸ்கள் மிகச் சொற்பம். தப்பிவிடுவதே அதிகம். இதில் உள்ளூர் அரசியல்வாதிகளிலிருந்து பெரிய இடம் வரையில் பல கைகள் சம்பந்தப்பட்டுள்ளன.

இதைப்பற்றி அந்தத் தொழிலாளி மேலும் விவரித்தார், “இவர்கள் கடத்திக்கொண்டுவரும் கேரள கஞ்சாப் பொதிகளை நாங்கள் அட்டை குளிக்கிற இடங்களுக்குக் கிட்டவாக நங்கூரம் கட்டி கடலுக்கடியில் பதுக்கி, GPS அடித்து வைத்திருக்கிறார்கள். அதனால் இந்த ஏரியாவுக்குள் அட்டை குளிக்க விடாமல் துரத்தியடிக்கிறார்கள். போதாக்குறைக்கு அட்டைப் பண்ணைகளில் கஞ்சாப் பொதிகளைப் பதுக்கியும் வைத்திருக்கிறார்கள். நடுக்கலில் நங்கூரமிட்டு வைக்கமுடியாது. அப்படி வைத்தால் அவர்களுடைய பொருட்களுக்குப் பாதுகாப்பு குறைவு. ஆனால், கடலட்டைப் பண்ணைகள் கஞ்சாக் கடத்தலுக்குப் பெரும் பாதுகாப்பு. ஏனென்றால், அட்டைப் பண்ணைக் காவல் என்ற பெயரில் கடத்தலை வலு சுலமாகச் செய்யலாம். கடற்படைக்கும் பொலிசுக்கும் தண்ணி காட்டலாம். அட்டைப்பட்டிகளுக்குள் பதுக்கி வைத்திருக்கும் கஞ்சாவுக்குச் சிலர் காவலிருக்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், அட்டைப் பண்ணைகளுக்கான அரச அனுமதிப் பத்திரம் என்ற பெயரில் கஞ்சாப் பொதிகளுக்கும் அரச அனுமதியோடு காவல். ஆட்சி மாறினால் என்ன, கட்சி மாறினால் என்ன, கெட்டிக்காரக் கள்வர்களுக்கு எல்லாம் ஒன்றுதான்.”

இதைப்பற்றி நீங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அல்லது கடற்றொழில் அமைச்சரிடம் முறையிடவில்லையா? என்று கேட்டேன். “முறைப்பாடுகளைச் செய்துகொண்டு தானிருக்கிறம். அதைவிட, அவர்களுக்கு இதெல்லாம் தெரியும். யாரும் நடவடிக்கை எடுக்கிறார்களில்லை” என்றார் எரிச்சலும் கவலையும் தொனிக்க. ஒரு சிறிய குற்றப் பட்டியலையும் சமர்ப்பித்தார்.

1. நூற்றுக்கணக்கான பண்ணைகளில் அட்டைகளே இல்லாமல் வெறும் பட்டிகள்தான் காணப்படுகின்றன.

2. காவல் கொட்டில்களில் தினமும் காவலாளிகள் நிறைவெறியில் காணப்படுகிறார்கள்.

3. பயன்பாடற்ற வெற்றுப் பண்ணைகள் ஏன் கடல்களை அடைத்து நிற்கின்றன என்று கேட்பதற்கு எந்தக் கடற்றொழிற் சங்கத்துக்கும் வல்லமை இல்லை.

4. சங்கங்களில் இருக்கும் தலைமைகளில் பெரும்பாலானோர் அட்டைப்பண்ணை முதலாளிகளின் ஆட்கள்

5. பண்ணைகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் பிரதேச அதிகாரிகள், அந்தப் பண்ணைகள் எல்லாவற்றிலும் அட்டை வளர்க்கப்படுகிறதா என்று கண்காணிப்பதில்லை.

இதைப்பற்றி இன்னொரு கடலோடியான தமயந்தி விமல் சொல்கிறார், “முப்பது வெள்ளிக் காசுக்கு ஆசைப்பட்டு சொந்த நண்பனே ஆண்டவரைக் காட்டிக்கொடுத்ததுபோல், கடலின் சொந்த மக்களாலேயே கடல் காட்டிக் கொடுக்கப்படுகிறது” என்று.

இதற்கெல்லாம் பதில்தான் என்ன? முடிவுதான் என்ன?

■

# SST SPICES & Things




**Indian | Sri lankan | South Asian**

Groceries & Take away

At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!




## 7 days

## 10 am to 8 pm

**SST Spices & Things**
**Where quality meets community**

**Location:**
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020

**Contact:**
03 9417 2517

**Email:**
sstspicesnthings@gmail.com

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 98 ஆவணி 2025 தொ.பே:1800 960 162

# நான்கு சுவர்களை விட்டு வெளியே வாருங்கள்

'இலங்கையில் ஆட்சி மாறிவிட்டது. அமைதிக் காட்சியும் திரும்பிவிட்டது. தெற்கோடு இணைந்து வாழத் தமிழர்கள் மனோநிலை ரீதியாகத் தயாராகி விட்டார்கள், அதற்கு இயைந்தாற்போல தேசிய மக்கள் சக்தியின் சமதர்ம ஆட்சி அமைந்துவிட்டது' என்றெல்லாம் கருந்து மழை பொழிந்தோரின் கன்னத்தில் 'பளார்....பளார் 'என செருப்பால் அடித்துள்ளது செம்மணி விவகாரம்.

'செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான தகவல்களை வெளியுலகுக்கு எடுத்துச் சொல்வோர் வழமைபோலவே அரச படைகளின் கண்காணிப்பு வலயத்துக்குள்தான் இன்னமும் உள்ளனர்' என்பதற்கு சுயாதீன ஊடகவிய லாளர் குமணன் மீதான விசாரணை அழைப்பு சிறந்த சான்றாகும். இலங்கையில் ஆட்சி மாறிவிட்டாலும், படைகளின் ஆக்கிரமிப்பு – அடக்கி ஆளும் மனோநிலை இன்னும் மாறவில்லை என்பது கசப்பான உண்மையாகும். செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 140 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 18 வரையிலான எலும்புக்கூடுகள் சிறார்களினுடையவையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. எலும்புக்கூடுகளின் அளவு சார்ந்த விடயங்களை அவதானித்தே அவை சிறுவர்களினுடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. 140 மனித எலும்புக்கூடுகள் எனக்கூறிவிட்டு இந்த விடயத்தை அவ்வளவு எளிதில் கடந்து சென்று விடமுடியாது. அரச படைகளால் 140 தமிழர்கள் கொன்று புதைக்கப்பட்டுள்ளனர் என்பது பாரதூரமான விடயமாகும். 140 என்பது இறுதி எண்ணிக்கை அல்ல. அகழ்வுப் பணிகள் தொடரவுள்ளன. ஸ்கான் பரிசோதனை அறிக்கையும் வெளிவரவுள்ளது.

படையினரால் கொன்று – மண்ணுக்குள் புதைக்கப்பட்டவர்களின் ஆன்மா இலங்கையை சும்மா விடப்போவதில்லை. இலங்கை மீது வலிந்து கட்டமைக்கப்படும் அத்தனை அரசியல் போலி பிம்பங்களையும் மண்ணில் புதைக்கப்பட்டவர்கள் உடைத்து நொருக்கிவிடுகின்றனர்.

இலங்கை பேசிவரும் போலியான ஜனநாயகத்தைத் தோலுரித்து காண்பித்துள்ளனர் மண்ணுக்குள் புதையுண்டவர்கள். இலங்கை தொடர்பிலான வழமையான பார்வையையும் அவர்கள் சிதைத்துள்ளனர். இதுவரை காலமும் மனச்சாட்சியுள்ள சிங்கள மக்கள் மத்தியில் இருந்த போர் வெற்றிவாதம் குறித்த நினைப்பை அவர்கள் ஆட்டங்காணச் செய்திருக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க இலனக்கை அரசே நிதியை ஒதுக்கி புதை குழிகளை தோண்டுகின்றது. அத்துடன், ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை செம்மணிக்குள் அனுமதித்து தாங்கள் மனித உரிமைக்கு முன்னு ரிமையளிப்பதாக விளக்கம் அளிக்கப்படுகின்றது.

ஆனால் அரசு செம்மணி குறித்த விசாரணையை குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளது. மறுபுறம் இலங்கைப் புலனாய்வு பிரிவினர் செய்தி சேகரித்தவர்களையே விசாரணைக்கு அழைத்துள்ளனர். இதுகூட ஒரு வகையான எச்சரிக்கையாகவே பார்க்கப்படுகின்றது. இந்த நிலையில் செம்மணி விசாரணைக்கு மக்கள் எவ்வாறு தமது சாட்சியங்களை வழங்குவார்கள்? புலம்பெயர் தேசத்தில் ஜே.வி.பி. ஆட்சிக்கு பச்சைக்கொடி காட்டியவர்கள், இது தொடர்பில் என்ன சொல்லப்போகின்றார்கள்?

செம்மணிப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணைகோரி கன்பராவில், சில அமைப்புகளின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதேபோல செம்மணிப் புதைகுழி மண்ணை பிளந்த நீதி கேட்கும் ஆன்மாக்களுக்கு என்ன செய்தோம் என்றால், நான்கு சுவர்களுக்குள் நாற்பது பேரை அழைத்து விளக்கேற்றி இருக்கின்றது விக்டோரியத் தமிழ்ச்சங்கம்.

விக்டோரியத் தமிழ்சங்கம் நடத்தும் விழாக்களில் தடக்கி விழுந்தால் கூட , நாடாளுமன்ற உறுப்பினர்களின் காலில் தான் விழக்கூடிய மாதிரி நிகழ்வுகள் இடம்பெறும் . அந்தளவுக்கு எம்.பிக்கள் குவிந்திருப்பார்கள். ஆனால் மேற்படி நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எவரேனும் அழைக்கப்படவில்லை.

விக்டோரியத் தமிழ்ச்சங்கத்தின் நிகழ்வு அறிவித்தலில் செம்மணியில் கொல்லப்பட்டவர்களுக்கான நீதி என்று எழுதப்பட்டிருந்தது. ஆனால் யார் மூலம், எவ்வாறு நீதி கோர முனைந்தனர் என்பது பற்றி தெளிவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களை வரவழைத்து பேரம்பேசும் வல்லமை உள்ள விக்டோரியத் தமிழ்ச் சங்கம், இந் நிகழ்வுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை வரவழைத்து நாடாளுமன்றத்தில் இது பற்றி கதைக்குமாறு வலியுறுத்தி இருக்கலாம் அல்லவா? ஒருவேளை லேபர் அரசுக்கும், சங்கத்தின் ஆஸ்தான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்த சங்கம் விரும்பவில்லைபோலும்.

நினைவேந்தலை நடத்துவதும், கூட்டம் போடுவதும் மட்டும் இலக்காக இருக்கக்கூடாது.

நாங்கள் செய்யாத போராட்டங்களா? என்ற பழைய பல்லவியை விடுத்து, செம்மணி விவகாரத்தில் நீதி என்ற இலக்கை அடையும்வரை அதற்காக எல்லா வழிகளிலும் போராட வேண்டும். ஊடகப் பிரசாரத்துக்காக அன்றி, உண்மைக்காக – இதய சுத்தியுடன் களத்தில் இறங்கி சமராட வேண்டும்.

இது பற்றி விக்டோரியத் தமிழ்ச் சங்கம் கூடுதல் கரிசனை செலுத்த வேண்டும் என்பதே தமிழர்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

இஸ்ரேலின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் பலஸ்தீனத்தை ஆஸ்திரேலியா இன்று ஆதரித்திருக்கின்றது. பலஸ்தீனத்துக்கு ஆதரவாக ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற போராட்டங்கள் மற்றும் அழுத்தங்களே இதற்கு பிரதான காரணமாகும். எனவே, புலம்பெயர் தேசத்தில் வாழும் தமிழ்க் குழுக்கள் சிறந்த அழுத்தக் குழுக்களாக தம்மை கட்டமைத்துக்கொள்ள வேண்டும். இதுவே ஒட்டு மொத்த தமிழர்களின் அவா.

# சாதீயம்-(தீரா)விடம்

**உங்க தலைவன் பொறந்த நாளு போஸ்டர் ஒட்டவும் – உங்க ஊர்வலத்தில தர்ம அடிய வாங்கிக் கட்டவும் – அட எங்க முதுகு நீங்க ஏறும் ஏணி யாகவும் – நாங்க இருந்தபடியே இருக்கணுமா காலம் பூராவும்?**

**– டேய்**

**மனுசங்கடா நாங்க மனுசங்கடா – உன்னப் போல அவனப் போல எட்டுச்சாணு ஒசரமுள்ள மனுசங்கடா நாங்க மனுசங்கடா"**

**– கவிஞர் இன்குலாப்**



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

காதல் திரைப்படத்தில் பரத் -சந்தியா ஊரை விட்டு ஓடிப் போயி திருமணம் செய்துகொள்வார்கள். அப்போது அவர்களை தேடிவரும் சந்தியாவின் சித்தப்பா ஊருக்கு வந்தால் நாங்கள் நல்லபடியாக பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லி காரில் செல்லும்போது ஒரு கேள்வி கேட்பார்.

"தம்பி நீங்க என்ன ஜாதி" அதற்கு பரத் "மனுஷ சாதி" என்பார். அதற்கு மறுபடியாக, "அது எனக்கு தெரியுது. மனுஷன்னா மனுஷன். மிருகம்னா மிருகம். மிருகத்துலயும் ஜாதி இருக்கு தம்பி. சிங்கமும் மிருகம் தான், புலியும் மிருகம் தான் , பன்னியும் மிருகம்தான்.

மனுஷன்ல நீ யாரு. சிங்கமா ,புலியா ,நாயா இல்லை பன்னியா? என்ன நெஞ்செழுத்தம் இருந்தா என் வீட்டு பொண்ண கட்டுவ? சிங்கம் டா நாங்க " என்று சொல்லிவிட்டு பரத்தை அடித்து நொறுக்குவார்கள்.

சந்தியாவின் பாட்டியும், "நம்ம வீட்டு மானம் போச்சு, அந்த நாயை வெட்டிப் போடுங்கடா" என்று சாதிவெறியுடன் சொல்லுவார். நெஞ்சை உருக்கும் காட்சி இது. இது ஏதோ படத்தில் வரும் காட்சி அல்ல. இது அன்றாடம் தமிழகத்தில் நடைபெறும் சம்பவம்.

கடந்த மாதம் தூத்துக்குடி மாவட்டத்தில் மென்பொறி யாளரான கவின் செல்வ கணேஷ் தனது பெற்றோர் கண்ணெ திரே உயர் ஜாதியினரைச் சேர்ந்த அவர் காதலித்த பெண்ணின் சகோதரனால் கொல்லப்பட்டிருக்கிறார்.

இந்த கொலை சம்பவத்தில் இளம்பெண்ணின் பெற்றோர், சார்பு ஆய்வாளராக பணியாற்றி வரும் சரவணனுக்கும், கிருஷ்ணகுமாரிக்கும் தொடர்பு இருப்பதாக உயிரிழந்த கவின் குடும்பத்தினர் குற்றம்சாட்டி வந்தனர். தொடர்ந்த 5 நாட்கள் போராடிய பிறகே காவல்துறை பெண்ணின் பெற்றோரை காவல்துறையிலிருந்து இடைநீக்கம் செய்திருக்கிறது.

ஊடக வெளிச்சம் கிடைக்கும் இந்த நவீன காலத்திலும் ஒவ்வொரு முறை இத்தகைய சம்பவங்கள் நிகழும் போது, பட்டியலின மக்கள் போராடித்தான் குறைந்தபட்ச நீதியை பெற வேண்டியிருக்கிறது. இது ஏதோ நடந்த ஒரு ஆணவக்கொலை அல்ல. 2014 முதல் 2024 வரை மொத்தம் 59 ஆணவக்கொலைகளை மதுரையைச் சேர்ந்த எவிடென்ஸ் எனும் என்ஜிஓ நிறுவனம் ஆவணப்படுத்தியுள்ளது .

இவற்றுள் ஆறு வழக்குகள் மட்டுமே நீதிமன்ற விசாரணை வரை சென்றுள்ளன, மற்ற வழக்குகள் ஆரம்ப நிலையி லேயே நின்றுபோயின. ஆதிக்க ஜாதியினரின் மிரட்டலால் பல வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன . இந்த 59 வழக்குகளில் 23 ஆணவக்கொலைகளில் காதலர்களில் (அ) தம்பதியரில் ஒருவர் பட்டியல் இனத்தவர்.

தமிழகத்தை உலுக்கிய சம்பவங்கள் நமக்கு தெரியும் அல்லவா? தலித் இளைஞர் இளவரசன், இடைநிலைச் சாதியைச் சேர்ந்த திவ்யா எனும் பெண்ணை மணம் புரிந்ததையொட்டி நடந்த பல்வேறு வன்முறை சம்பவங்களைத் தொடர்ந்து மர்மமான முறையில் இரயில் தண்டவாளத்தின் அருகில் இறந்து கிடந்தார். அவர் தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்பட்டது.

பொறியியல் பட்டதாரி கோகுல்ராஜ் இடைநிலைச் சாதி யைச் சேர்ந்த சுவாதியை காதலித்த குற்றத்திற்காக கடத்தப்பட்ட அடுத்த நாள் நாமக்கல் மாவட்டத்தின் இரயில் பாதை யில் கோகுல்ராஜின் உடல் தலை வெட்டப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

அவருடைய சட்டைப் பையில் தற்கொலைக் குறிப்பு ஒன்று இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. அதாவது இளவரசன் தற்கொலை போலவே திட்டம் தீட்டி பின்னர் ஏதோ ஒரு காரணத்திற்காக அதை மாற்றி கொன்றே போட்டுவிட்டு சென்றுவிட்டனர் ஆதிக்க சாதியினர்.

திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த தலித் இளைஞர் சங்கர் அவருடைய மனைவியின் அதாவது ஆதிக்க சாதியினரின் பெற்றோரால் பட்டப்பகலில் பலரின் கண்ணெதிரே பேருந்து நிலையத்தில் கொடூரமாகக் கொல்லப்பட்டார். ஊடக வெளிச்சத்திற்கு வந்த ஆணவக்கொலைகள் இவை எல்லாம். வராமலேயே ஊருக்குள்ளேயே அடங்கிப்போனவை எத்தனையோ ? இதெல்லாம் நாம் மறந்தே போயிருப்போம். ஒவ்வொரு முறையும் மற்றொரு ஆணவக்கொலை நடக்கும்வரை, சில காலம் அதைப்பற்றி பேசிவிட்டு மறந்துவிடுவோம்.

தமிழ்நாட்டில் அதாவது பெரியார் பிறந்த மண்ணில் என்ன நடக்கிறது. நிலவுடைமையாளர்களான பார்ப்ப னரல்லாத இடைநிலைச் சாதியின ருக்கும் நிலமற்ற தலித்துகளுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வுகளை அறுபது வருடங்களாக தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும் திராவிடஅரசியல் களைந்திருக்கிறதா? இல்லை என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் பிராமணிய ஆதிக்கத்தை எதிர்த்து அரசி யல் செய்து ஆட்சிக்கு வந்த திராவிடக்கட்சிகள், ஏறக்குறைய அவர்களை அரசியலில் அகற்றிய பிறகு என்ன செய்தன? அந்த அதிகார இடத்தை இடைநிலைச் சாதிகளை கொண்டு நிரப்பின. அதிகாரமும் ,பணமும் வந்தால் என்ன நடக்கும். தமிழகத்தின் கலாச்சாரத்தில் ஊடுருவியுள்ள சாதியை ஒழிப்பதற்கு ஏதாவது ஆக்கபூர்வமாக நடந்திருக்கிறதா? அப்படியே தொடங்கினாலும் அது பெயருக்கு ஏதோ செய்துவிட்டு பிறகு கிடப்பில் முடங்கிவிடும் என்பது நாம் அறிந்தது தானே ?

பெரியாரால் முன்னெடுக்கப்பட்ட பார்ப்பன எதிர்ப்பு இயக்கத்தால் ஏராளமான பார்ப்பனர்கள் மேற்கத்திய நாடுகளி லும் இந்தியாவின் மற்ற நகரங்களிலும் குடியேறிவிட்ட பிறகு தமிழகத்தில் என்ன நடக்கிறது? தமிழகத்தின் எல்லா சாதி மோதல்களும் முக்கியமாக இடைநிலைச் சாதியினருக்கும் தலித்துகளுக்கும் இடையிலேயேதான் மூள்கின்றன என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கடைசியாக ஒரு பிராமணர் சாதி மோதலில் ஈடுபட்டார் என்று எப்போதாவது நாளிதழில் படித்திருக்கிறீர்களா ? ( நான் சங்கி இல்லை ,திராவிட அரசியல் சார்பாளனும் அல்ல )

இளங்கோவன் ராஜசேகரன் எழுதிய "சாதியின் பெயரால்: ஆணவக் கொலைகளின் பதிவு " என்ற புத்தகத்தை படியுங் கள். நம் காலத்தின் சமூகக் கொடுமைகளுள் ஒன்றான ஆணவக் கொலையை உள்ளார்ந்து புரிந்துகொள்ள உதவும் முதன் மையான ஆவணம் இது.

சமூக நீதியை உயர்த்திப் பிடிக்கும் ஒரு மாநிலத்தில் சாதிவெறி எவ்வாறு வேர்கொண்டிருக்கிறது , எவ்வாறு சமூக அமைப்புகள் எங்கும் நீக்கமற சாதியைப் பரப்புகின்றன நீதியை, சமத்துவத்தை, அடிப்படை மனிதத்தன்மையை எவ்வாறு அவை ஓயாமல் அழித்தொழிக்கின்றது என்பதை இந்நூல் தரவுகளோடு காட்சிப்படுத்துகிறது.

அ. சிவசுப்ரமணியன் எழுதிய "ஆணவக் கொலைச் சாமிக ளும் பெருமிதக் கொலை அம்மன்களும்" இன்னொரு ஆணவம். அந்தப் புத்தகத்தில் ஒரு சம்பவம் உள்ளது. சாதி மாறி காதலிக்கும் தன் பெண்ணை கண்டிக்கவேண்டும் என ஆசிரியரிடம் சொல்லும் ஒரு தந்தை இறுதியாக சொல்லுவார், " அவ நான் சொன்னதைக் கேட்கவில்லையென்றால் அவளை வைக்கோல் போரில் போட்டு நெருப்பு வைத்துவிடுவேன்.எனக்கு மானம் பெருசு. என் சாதிதான் முக்கியம். குடும்ப கௌரவம்தான் முக்கியம். நா அப்படி வளந்தவன்" . இதுதான் அய்யா தமிழகத்தின் சமூக நீதி. இதை என்றாவது நமது தமி ழகக் கட்சிகள் பேசுகின்றனவா? இடதுசாரிகள் பேசிவிட்டு பிறகு தேர்தலின் பொது அதே கட்சிகளுடன் கூட்டணி வைத்துக்கொள்கின்றன என்பது தான் நிதர்சனம்.

"பரிதாபங்கள்" புகழ் கோபி சுதாகர் சாதி பயங்கரவாதம் பற்றி society paavangal என்ற பெயரில்வெளியிட்டு இருக்கும் யூடியூப் காணொளி கண்டிப்பாக நிச்சயம் துணிச்சலான செயல். தமிழில் மாபெரும் எழுத்தாளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலர் ஆணவக் கொலைகள் பற்றி மூச்சுவிடாமல் இருக்கும் இந்த நேரத்தில் ,சாதிய அமைப்புகளின் வறட்டு வீரம், எப்படி இளைஞர்களை சீரழிக்கிறார்கள் என்பதையும் யாருக்கும் பயப்படாமல் தைரியமாக நையாண்டி செய்ததை நாம் பாராட்டியே ஆகவேண்டும். ஆனால் இந்த வீடியோ தொடர்பாக கோபி, சுதாகருக்கு எதிராக தொடர்ந்து பல் வேறு சாதி அமைப்புகளை சார்ந்த நபர்கள் புகார்கள் அளித்து வருகின்றனர் .

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி

editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175





# முடிவிலாத் தொடரும் துயரம் : காசா பேரவலமும், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையும்

● நவீனன்

இன்று காசாவில் நடப்பது (Genocide by Starvation) பட்டினியின் மூலமான இனப்படுகொலை. இஸ்ரேலிய அரசு காசாவிற்கு உணவை அனுப்ப விடாது தடுப்பது ஒரு இனப்படுகொலை. இன்றைய காசா போல அன்று 2009இல் முள்ளிவாய்க்காலில் பெரும் மானுடப் பேரவலம் நிகழ்ந்தது. முள்ளிவாய்க்கால் அதுவொரு காலப் பெருந்துயரம் என்றே வரலாற்றில் பதியப்படும்.

தொடரும் வான்வழித் தாக்குதல்கள், மறுபுறம் உணவு, உயிர் உத்தரவாதம், மருத்துவ வசதிகள் இன்றி பச்சிளங் குழந்தைகள் உட்பட பாலஸ்தீன மக்களின் பரிதாப நிலை பெரும் அவலமாகியுள்ளது. இதே போலவே அன்று, கொத்துக் கொத்தாகக் கொன்றழிக்கப்பட்ட தமிழ் மக்களின் குருதி படிந்து சிவந்த நிலமே முள்ளிவாய்க்கால். பல ஆண்டுகளாக தம் இருப்புக்காக இனத்தின் விடுதலைக்காகப் போராடிய ஒரு இனக்கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கொத்துக் குண்டுகளுக்கும் எறிகணைகளுக்கும் இரையாக்கப்பட்ட 2009 மே 18 நாளாகும்.

முள்ளிவாய்க்கால் மண்ணும் மே 18 ஆம் நாளில் ஈழத்தமிழர் வாழ்வில் இருந்து மறக்கவும் மன்னிக்கவும் முடியாத ஒன்றாக இதனாலேயே தன்னை வரலாற்றில் நிலைநிறுத்திக் கொண்டது.

**காசாவில் மனிதப் பேரவலம்:**

அன்று 2009இல் முள்ளிவாய்க்காலில் மானுடப் பேரவலம் நிகழும் போது உலகம் கண்மூடி மௌனித்திருந்தது. ஆயினும் இன்றைய காசாப் பேரவலத்தை உலகம் கண்டித்தாலும், அப்பாவி பாலஸ்தீன மக்களின் இழப்பைத் தடுக்க முடியாமல் கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது. இந்த இரு காசா - முள்ளிவாய்க்கால் பேரவலம் , காலப் பெருந்துயரம் என்றே வரலாற்றில் பதியப்படும்.

தீவிரமாக இஸ்ரேல் நடத்தி வருகின்ற ஆகாயமார்க்கமான தாக்குதல்களால் காசாவில் இதுவரை ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலங்கள் வார்த்தையில் வடிக்க முடியாதவையாக உள்ளன. குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் மடிந்துள்ளனர். உயிரிழப்புகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. உலகின் பல நாடுகள் பெரிதும் கண்டித்தும் கவலையடைந்தும் உள்ளன.

தொடரும் மோதல்களால் காசாவில் பத்து இலட்சம் குழந்தைகளின் உயிர்கள் உத்தரவாதமின்றி இருப்பதாக சர்வதேச குழந்தைகளைப் பாதுகாக்கும் (Save the Children) தன்னார்வ அமைப்பு கூறியுள்ளது.

**மருத்துவமனைகள் மீது தாக்குதல்:**

அத்துடன் மருத்துவமனைகளில் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளதால் பலருக்கும் சிகிச்சை அளிக்க முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. மருந்துப் பொருட்கள் பற்றாக்குறை நீடிக்கும் பட்சத்தில் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. 50,000 கர்ப்பிணிகள் போதிய மருத்துவ உதவிகள் இல்லாமல் தவிக்கிறார்கள் என இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

> **இன்று காசாவில் நிகழ்வது போல அன்று 2009இல் முள்ளிவாய்க்காலில் பெரும் மானுடப் பேரவலம் நிகழ்ந்தது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நிறுத்தாமல் உலகம் கண்மூடி மௌனித்திருந்தது. இன்றைய காசா பேரவலத்தை உலகம் கண்டித்தாலும், போரைத் தடுக்க முடியாமல் கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது.**

ஒருபுறம் மருந்துகளின் தட்டுப்பாடு, மறுபுறம் இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல் என காசா மக்களும் குழந்தைகளும் இருபெரும் சிக்கல்களுக்கு மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காசாவில் பசிக் கொடுமையால் தவிக்கின்றனர்.

காசா சுகாதாரத்துறை தகவலின் படி, அங்கு சுமார் 60000 பேர் உயிரிழந்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த எண்ணிக்கை இதனைவிட அதிகமென்றே தெரிவிக்கப்படுகின்றது. இந்த இழப்புகளை நிறுத்தக்கோரியும், இஸ்ரேல் மீதே உலகநாடுகள் பலவும் குற்றம் சுமத்துகின்றன.

**கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட தமிழர்:**

2008 இன் இறுதிப் பகுதியிலும், 2009 ஆரம்பத்திலும், ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் போர் நடைபெற்றது.

மேற்குலகின் உதவியுடன் அதி நவீன ஆயுதங்கள் இரக்கமே இல்லாது முள்ளிவாய்க்கால் மண் மீது வீசப்பட்டன. அண்டை நாடு முதல் ஐ.நா. சபை வரை வேடிக்கை பார்த்து நிற்க பேரினவாத அரசின் கொடூர வன்செயலால் பிஞ்சுக் குழந்தை முதல் வயதானவர்கள் வரை குரல்வளை நசிக்கப்பட்டும் உயிரோடு புதைக்கப்பட்டும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் கொல்லப்பட்டிருந்தனர் .

தமிழீழ தனிநாடு விடுதலை கோரி 1956 இலிருந்து அகிம்சைப் போராட்டங்களிலும், பின்னர் 2009 வரை ஆயுதப்போராட்டத்தின் இறுதிக்கட்டம் முள்ளிவாய்க்காலில் பெரும் மனிதப் பேரழிவுடன் தமிழர்களின் ஈழப்போராட்டம் மௌனிக்கப்பட்டது.

இத்தனைக்கும் தமிழ் பேசும் மக்கள் கேட்டது அவர்களின் நிலம் அவர்களுக்கு வேண்டும் என்பதேயாகும். இதை ஏற்க மறுத்த பேரினவாத அரசாங்கம் தமிழ் மக்களை மேற்குலகின் துணையோடு இரக்கமே இல்லாமல் முள்ளிவாய்க்காலில் அழித்தொழித்தது.

இன்றைய காசா நிலவரமும் தமிழர்கள் சொந்த நிலங்களில் இருந்து விரட்டப்பட்டமை போல பாலஸ்தீனர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

**பல்லாயிரம் குழந்தைகள் மரணிக்கும் அபாயம் :**

இதேவேளை ஐந்து நிமிடத்திற்கு ஒரு பாலஸ்தீன குழந்தை மரணிப்பதாக மத்திய கிழக்கு ஆசியாவை கொண்டு இயங்கும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. இதுவரையில் கொல்லப்பட்டவர்களில் நாற்பது சதவீதமானோர் குழந்தைகள் என காசாவின் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காசா மருந்துகளின் தட்டுப்பாடு, மறுபுறம் இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல் என காசா மக்களும் குழந்தைகளும் பாரிய சிக்கல்களுக்கு மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காசாவில் இருக்கின்றனர்.

**போர்க்குற்றமும் இனப்படுகொலையும்:**

இஸ்ரேல் தற்போது பாலஸ்தீனத்தில் நடாத்தும் போரை பல்வேறு நாடுகளும் கண்டித்து, போர்க்குற்றமாக வெளிப்படுத்தி உள்ளன. ஆயினும் ஈழத்தில் போரின் இறுதிக் கட்டத்தில் ஏறத்தாழ 40,000 பொதுமக்கள் வரை இறந்தனர் என ஐக்கிய நாடுகளின் அறிக்கை தெரிவித்தது. இவர்களில் பெரும்பாலானோர் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாடற்ற ஏவுகணைத் தாக்குதல்களில் அகப்பட்டு இறந்தனர் என அவ்வறிக்கை தெரிவித்தது.

தமிழர் மீதான போர்க்குற்றங்கள் இழைத்ததாக சிறிலங்கா அரசு மீது குற்றம் சாட்டப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் இலங்கை அரசு இழைத்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை தற்போது விசாரணைக்கு உட்படுத்தி இருந்தாலும் கொல்லப்பட்ட, காணாமல் போன தமிழர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

ஈழத்தில் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த கோர நிகழ்வுகளைப் போலவே,இராணுவ முற்றுகைக்குள் காசா முடங்கி,இஸ்ரேலின் போர்க் குற்றம் தொடர்கிறது. உலகின் மனச்சாட்சியும் மௌனித்திருக்க, ஐ.நா.சபையின தோல்வியை வெளிப்படுத்தும் வண்ணம் இஸ்ரேலின் கோரத் தாண்டவம் அரங்கேறுகிறது.

அன்று முள்ளிவாய்க்காலிலும், இன்று காசாவிலும் நிகழும் இனப்படுகொலை பேரவலமானது முடிவிலாமல் தொடர்கின்றது. அப்போது முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நிறுத்தாமல் உலகம் கண்மூடி மௌனித்திருந்தது. ஆனால் இன்றைய காசா பேரவலத்தை உலகம் கண்டித்தாலும், போரை தடுக்க முடியாமல் கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய நிலையில் உள்ளமை கவலைக்குரியதே.

பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு அன்று ஸ்ரீலங்கா அரசு தமிழர் தாயகத்தில் பட்டினியின் மூலமாகவும் இனப்படுகொலையை செய்திருந்தது. அன்று எமக்கான நீதியை தருவதற்கு சர்வதேசம் தயாராக இருக்கவில்லை.

தமிழினத்தின் மீது இழைக்கப்பட்டதும், இழைக்கப்பட்டு வருவதுமான இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றினூடாக சர்வதேச விசாரணை ஒன்றைக் கோருவதன் மூலமாகவே தமிழினம் தன்னை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையிலான சுயாட்சிக் கட்டமைப்பை நிறுவிக்கொள்ள முடியும்.

பாலஸ்தீன மக்கள் பெரும் அவலங்களின் பின்னராக, தனியரசை நிறுவ சர்வதேச நாடுகள் முன்வந்துள்ளன. தற்போது பிரான்சைத் தொடர்ந்து ஐக்கிய ராஜ்யமும் கனடாவும் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க தயாராகியுள்ளன. அன்று தமிழர் தாயகத்தில் நடந்த இனப்படுகொலை போன்றே இன்று காசாவில் நிகழ்கிறது.

பாலஸ்தீன மக்களின் சுதந்திர தனியரசை சர்வதேசம் அங்கீகரிப்பது போல தமிழர்களின் தாயகக் கனவும் ஓர் நாள் நிறைவேறும் அவாவில் தமிழ் மக்கள் உள்ளனர்.

---

# சாதீயம்-(தீரா)விடம்

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது, ஒரு குறிப்பிட்ட சமூகத்தை இழிவுபடுத்தும் விதமாகவும், இரு பிரிவினரிடையே மோதலை ஏற்படுத்தும் வகையிலும் வீடியோ இருப்பதாகவும் அவர்கள் மேல் குற்றம் சாட்டியுள்ளனர் . இதுமட்டுமில்லாது அவர்களை மிரட்டும் வீடியோக்கள், பதிவுகள் சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் சூழ்நிலை இங்கேயுள்ளது.

இந்திய தண்டனைச் சட்டத்தில் 2023ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட The Bharatiya Nyaya Sanhita (BNS) - 103(2) திருத்தமானது கும்பலாகச் சேர்ந்து செய்யும் குற்றங்களான அடித்தல் ,கொள்ளுதல் போன்ற குற்றத்துக்கான கடுமையான தண்டனைகளை உள்ளடக்கியது எனினும் இந்த சட்டமானது ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான குற்றவாளிகளை சேர்ந்து செய்யும் குற்றங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். ஆனால் உயர் சாதியினர் அதாவது ஆதிக்க சாதியினர் சேர்ந்த பெண் அல்லது ஆணின் குடும்பத்தாரால் இழைக்கப்படும் குற்றங்களான ஆணவக்கொலைகள் இந்தச் சட்டத்தின் கீழ் வருவதில்லை .

பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான எதிரான வன்முறை தொடர்பான சட்டம் 1989 முதலே இருக்கிறதென்றாலும் ,இந்த சட்டங்கள் எல்லாம் பாதிக்கப்பட்ட பட்டியலின மக்களுக்கு எந்தவொரு நிவாரணமோ ,தீர்வோ கிடைப்பதற்குள் குற்றவாளிகள் மிக எளிதில் வெளிவருவதற்கான எல்லா வழிவகைகளை நமது நீதி அமைப்பில் நிறையவே இருக்கிறது. உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா . 1997 ஆம் ஆண்டு மதுரையைச் சேர்ந்த மேலவளவு பஞ்சாயத்து தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களான 7 பேரை அநியாயமாக வெட்டிக்கொலை செய்த உயர்சாதியினர் மிக எளிதில் நன்னடத்தை ? காரணமாக சிறைத்தண்டனையில் இருந்து வெளியே வந்து சுதந்திரமாக திரிகின்றனர்.

ஆணவப் படுகொலைக்கு தனிச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று விசிக தலைவர் திருமாவளவன் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றார். இந்தியா சுதந்திரம் அடைந்து 80 வருடம் ஆகப் போகிறது. ஆனால் ஒரு தலித் பொதுத்தொகுதியில் வேட்பாளராக நிற்க முடியுமா ? எதற்கெடுத்தாலும் சனாதனம் , சங்கி ,பிராமணியம் என்று பொது எதிரியை உருவாக்காமல் நாம் நம்மை எப்பொழுது சுத்தம் செய்யப்போகிறோம்.

தமிழகத்தில் சாதி சார்ந்த எத்தனை கட்சிகள் இருக்கின்றன? இவர்களை பகைத்துக்கொண்டு எந்தவொரு அரசும் கடுமையாக நடவடிக்கைகள் எடுக்குமா ? ஆணவக்கொலைகள் தேர்தல் சமயத்தில் நடந்தால் மட்டுமே கட்சிகள் இந்த சம்பவத்தை வைத்துக்கொண்டு வாக்கு அரசியல் நடத்துவார்கள். இல்லையெனில் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். தமிழர்கள் எதாவது ஒரு பெரிய நடிகர்கள் படம் வெளியானால் இவற்றையெல்லாம் மறந்துவிட்டு அதன்பின்னே ஓடிவிடுவார்கள். இல்லையென்றால் இருக்கவே இருக்கிறது வடக்கன்ஸ் , சங்கி , சனாதனம் ,கீழடி , ஆதித்தமிழர் , தமிழ் தேசியம் , ஒன்றிய அரசின் சூழ்ச்சி , இந்தித் திணிப்பு இன்னபிற

இதற்கு என்ன தான் தீர்வு ?

சட்டங்கள் கடுமையாகப்பட வேண்டும். பள்ளிக்கல்வி பயிலும்போதே மாணவர்களை சாதித் திணிப்பு செய்வோரை கடுமையாக தண்டிக்க வேண்டும். சாதி அமைப்பு சார்ந்த வன்முறைகளை இரும்புக்கரம் கொண்டு தடுக்கவேண்டும். சமூக ஊடகங்களில் வன்முறை பரவும் வழி வீடியோ,பதிவுகள் செய்வோரை தண்டிக்க சட்டங்கள் வேண்டும்.

இறுதியாக ஜார்ஜ் ஆர்வெல் எழுதிய விலங்குபண்ணை நாவலில் வரும் ஒரு மேற்கோளைக் கொண்டு இந்த கட்டுரையை முடிக்கலாமென்று நினைக்கிறேன் “எல்லா விலங்குகளும் சமம், ஆனால் சில விலங்குகள் வேற சில விலங்குகளை விட அதிகமா சமம்.” இந்த மனநிலை மாறாவிட்டால் ஆணவக்கொலைகளை தடுத்து நிறுத்துவது கடினமே.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

# இருக்கிறாரா, இல்லையா தாயகம் நினைப்பதென்ன?

● தாயகத்திலிருந்து பிருந்தாபன்.ஜெ

இம்மாதத்தின் தொடக்கத்தில் உலகம் முழுவதும் வாழுகின்ற தமிழர்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருக்கு அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்வு கவனிக்கத்தக்கவொன்றாக மாறியிருந்தது. அதாவது இலங்கையில் போர் மௌனிக்கப்பட்டு 16 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த அஞ்சலி நிகழ்வு தேவைதானா? இதனை தாயகத்தில் வாழுகின்ற தமிழர்கள் எப்படி பார்க்கின்றனர் என்பதை ஆராய்வதே இந்தச் சிறுபத்தியின் உள்ளடக்கம் ஆகும்.

முதலில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்பான புலம்பெயர் சமூகம் எப்படி இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். இன்றிருக்கின்ற அனைத்துப் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கும் அரசியல் அடையாளத்தைக் கொடுத்தவர்கள் புலிகள்தான்.

அதற்கு முன்புவரை இயங்கிய புலம்பெயர் அமைப்புகள், ஊர் அபிவிருத்தி கழகங்களாகவும், ஆலய பரிபாலன சபைகளாகவும், பாடசாலை பழைய மாணவர் சங்கங்களாகவுமே இயங்கிவந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தச் சங்கங்களையெல்லாம் நாடுகள்தோறும் ஒருங்கிணைத்து, தமிழ் தேசிய அடையாளத்தைக் கொடுத்தார்கள். தமிழர் தேசத்தின் பொருளாதாரத் தூண்களாக அடையாளப்படுத்தினார்கள். தாயகத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை சர்வதேசத்தின் முன் வெளிப்படுத்தும் ஊடகமாக புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை சட்டகப் படுத்தினார்கள்.

அந்த அமைப்புக்களுக்குத் தமது போராளிகளை நேரடியாக பொறுப்பாளர்களாக நியமித்து குளறுபடிகள் நேராதவாறு பார்த்துக்கொண்டனர். எனவே ஆயுத ரீதியிலும், வெளியுறவு தொடர்பிலும் புலிகள் பலமடைவதற்கு இந்தப் புலம்பெயர் அமைப்புகள் பாரிய பங்களிப்பை வழங்கின.

2009ஆம் ஆண்டில் போர் முடிவுற்றதன் பிற்பாடு, புலிகளால் நிர்வகிக்கப்பட்ட இந்தப் புலம்பெயர் அமைப்புகள் மேய்ப்பனற்ற ஆடுகளாகின. தமிழ் தேச கட்டுமானத்திற்காகத் திரட்டப்பட்ட பெரியளவு நிதியை "அடித்துக்கொண்டு" ஓடுவதில் போட்டியிட்டன. புலிகள் தம் பினாமிகளாக நியமித்தவர்கள் பெரும் அதிஸ்ரசாலிகளாக மாறினர்.

இறுதிவரைப் போராடி, தன் உடல், பொருள், ஆவி என அனைத்தையும் இழந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் தெருவில் நின்று பிச்சையெடுக்க, இந்தப் பினாமிகள் போராளிகளின் பெயரில் திரட்டிய நிதியை சுருட்டிக்கொண்டு ஒரே இரவில் ஒபாமாவானார்கள். போரில் அனைத்தையும் இழந்து நலன்புரி நிலையங்களுக்குள் சரணடைந்த மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு அடுத்ததாக நம்பியது இந்தப் புலம்பெயர் அமைப்புக்களைத் தான். ஆனால் அந்த அமைப்புக்களோ, புலிகளின் சொத்துக்களைப் பங்குபிரிப்பதில் தம் முழுக்கவனத்தையும் செலுத்தி, அதில் வெற்றிகண்டன.

இவ்வாறாக பல நூறு அமைப்புக்களாக உடைந்து நொருங்கிவிட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களில் பல வந்தது வரைக்கும் இலாபம் என முடிவெடுத்து களத்திலிருந்து வெளியேறிவிட்டன. இப்போது ஏற்கனவே இருந்த சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்களோடு, 2009 இற்குப் பின்னர் உருவான பல புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் களத்தில் நிற்கின்றன.

இந்த அமைப்புக்களிடையே யார் பெரியவன், யார் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏகப் பிரதிநிதிகள் என்கிற ஈகோ சண்டைதான் தற்போது இடம்பெற்று வருகின்றது. ஐ.நாவிலோ அல்லது வேறு எந்த சர்வதேச அமைப்புக்களிலோ, நாடுகளிலோ ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான தீர்மானங்கள் எவையும் கொண்டுவரப்பட்டால், அதனைத் தாம் தான் செய்தோம் என உரிமைகோருவது, தாயகத்தில் தமிழ் மக்கள் சிறீலங்கா அரசு செய்யும் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக ஏதாவது



போராட்டங்கள் செய்தால், அதற்குத் தாம்தான் நிதியளித்தோம் என உரிமை கோருவது என தாயக மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தாம் தான் தீர்மானிக்கிறோம் என்கிற "படத்தை" பார்வையாளர்களே கூடாத திரையரங்குகளில் காண்பித்துக்கொண்டிருக்கின்றனர்.

ஒரு சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உயிரோடு இருக்கிறார், குடும்பத்தினர் உயிரோடு இருக்கின்றனர் என்கிற விடயத்தை வலியுறுத்துபவர்களாகவும், மற்றைய குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உயிரோடு இல்லை, அவர் இனி வரமாட்டார் என்பதை வலியுறுத்துபவர்களாகவும் பிரிந்து நிற்கின்றனர்.

இந்த இரு அமைப்பினரும் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் உருவானவர்கள்தான். இருக்கிறார் வருவார் என்று கூறும் குழுக்களும் தலைவர் இல்லை என்று விளக்கேற்றும் குழுக்களுமே ஒரே நிகழ்ச்சி நிரல் நின்று கொண்டு தமிழீழ தேசிய சித்தாந்தத்தை உடைக்கின்ற வேலைதான் செய்கின்றன. இந்த நிகழ்ச்சிநிரல் பற்றிய உண்மை தெரியாத முன்னாள் போராளிகள், தளபதிகள், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இவற்றுக்குப் பின்னால் செல்லும் துயரநிலையையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டவேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் உயிருடன்தான் இருக்கிறார். அவரின் மகள் துவாராக உயிருடன் இருக்கிறார். விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டு அம்மான் ரஷ்யாவில் இருக்கிறார். காலம் வரும்போது நேரில் வருவார்கள் என்ற கதைகளைக் கட்டவிழ்த்து, அதற்காக அல்லும் பகலும் உழைத்துக்கொண்டிருக்கின்ற இந்தியாவுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கடந்த வருடம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் மகள் என பெண் ஒருவரை அறிமுகம் செய்து தாயகத் தமிழர்கள் மத்தியில் கேலிக்குரியவர்களாக மாறி யிருந்தார்கள்.

தலைவரின் மகள் துவாரகா கரும்புலியாகிய உண்மைச் சம்பவத்தை தாயகத் தமிழர்கள் அனேகம்பேர் அறிந்திருக்கின்றனர். அதேபோல தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டுஅம்மான் என யாருமே இன்று உயிருடன் இல்லை என்பதையும் தாயகத்தில் வாழுகின்ற தமிழர்கள் நன்கு விளங்கிவைத்திருக்கின்றனர்.

ஆனால் இந்தியா சார்பான இந்தப் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் விடுதலைப் புலிகளின் தலைவர் உள்ளிட்டவர்கள் இன்னமும் உயிருடன்தான் உள்ளனர். நிச்சயம் வருவார்கள். போராடுவார்கள். தமிழீழம் பெற்றுத்தருவார்கள் என்கிற போலி விம்பத்தைக் கட்டமைக்க முயற்சிக்கிறார்கள். தமிழர்கள் மீண்டும் சுயமாக சிந்தித்துப் போராடி, ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலைப் பெற்றுவிடக்கூடாது, அது இந்திய நலன்களுக்கு ஆபத்தாக மாறிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்ற இந்தத் தரப்பினர், தலைவர் வந்து மீண்டும் உங்களுக்காகப் போராடுவார் என்கிற நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

ஆனால் தாயகத்தில் வாழும் தமிழர்களோ, தமக்காகத் தாமே போராடவேண்டும் என்பது தெளிவாகத் தெரிந்திருக்கின்றது. தலைவர் தான் கொண்ட கொள்கையை விட்டு ஒருபோதும் விலகியிருக்கமாட்டார் என்பதில் அசையாத நம்பிக்கை இருக்கின்றது.

போராட்டக்கொள்கையிலிருந்து தான் விலகினால் அடுத்த கனமே மெய்பாதுகாவலர் தன்னைச் சுட்டுக்கொல்லாம் என்பதை அடிக்கடி நினைவுபடுத்த வாழ்ந்த தலைவர் வே.பிரபாகரன் அவர்கள், இவ்வளவு மக்களை முள்ளிவாய்க்கால் அவலத்தினுள் தவிக்கவிட்டுத் தான் மட்டும் தப்பிப் போயிருக்கமாட்டார் என்பதில் தாயக மக்கள் அசையா நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

கடந்த 02ஆம் திகதி தமிழீழ தேசியத் தலைவருக்கு விளக்கேற்றி, அஞ்சலி செலுத்திய நிகழ்வு. சுவிஸில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு உலகம் முழுவதிலுமிருந்தும் அஞ்சலி செலுத்த விரும்பியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

தலைவர் வருவார் எனச் சொல்லியும், தலைவர் தற்போது மூளையில் ஏற்பட்டுள்ள புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். அதனால் அவருக்கு ஞாபக மறதி ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்து, அவரின் நோய்நிலமையை சீராக்க பெரியளவில் பணம் தேவை எனவும் கூறி பாரியளவு நிதி திரட்டல் புலம்பெயர் தேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்படியாகத் தலைவர் உயிருடன் இருக்கிறார் என்பதை பொய்யாகச் சொல்லி அவரின் பெயரில் நிதி திரட்டுவதைத் தடுக்கவே இந்த அஞ்சலி நிகழ்வை நடத்தினோம் என்று தலைவருக்கான அஞ்சலியை செய்தோடு தம் பக்க நியாயத்தையும் சொல்லி வருகின்றனர். அதில் ஒரு வித நியாயம் இருப்பினும், தலைவருக்கு அஞ்சலி செலுத்தி, தலைவர் தொடர்பில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற கனதியான மரியாதையை, நினைவை மங்கச் செய்யும் நிகழ்ச்சிநிரல் ஒன்றும் இருக்கலாம் என்கிற சந்தேகமும் இந்நிகழ்வில் உள்ளது. இந்த நிகழ்ச்சிநிரலானது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உள்ளிட்ட அனைவரையும் தாம் போரில் அழித்துவிட்டோம் எனக் கூறிவரும் இலங்கை அரசின் கூற்றுக்களுக்கும் பொருந்திப்போவதை அவதானிக்க முடிகின்றது.

இரணுவத்தளபதி கமல் குணரட்ட எழுதிய Road to nandikadal என்ற புத்தகத்தை அடிப்படையாக வைத்து சமராய்வு செய்தே தலைவரின் இறுதி நாளை ஏற்பாட்டாளர்கள் முடிவு செய்தனர் என்பது நகைப்புக்கிடமான விடயம் தான்.

மே 18 ஐ இனப்படுகொலை நாள் என்பதற்கு பதிலாக தமிழ் தேசிய நாளாக மடைமாற்றம் செய்வது யாருக்கான தேவைப்பாடு என்ற கேள்வியும் எழுகின்றது.

இவ்வாறானவர்களின் நிகழ்ச்சிநிரல்களையும் தெளிவாக விளங்கிவைத்திருக்கின்ற தாயகத் தமிழர்களிடையே, இவர்கள் குறித்த புரிதல் ஏற்பட்டிருக்கின்றது. அதனால்தான் இந்த நிகழ்வைப் பெரியளவில் தாயகத்தில் யாரும் கண்டுகொள்ளவில்லை. இருந்தால் அவர் தலைவர் இல்லையேல் அவர் இறைவன் எனக் கடந்துபோய்விட்டனர். தலைவர் இல்லை என்பதைத் தாயகத்தில் வாழுகின்ற அனைத்துத் தமிழர்களின் மூளைகளுமே ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் உள்ளம் அதனை ஏற்கவில்லை. உள்ளத்தளவில் தலைவர் இன்னமும் உயிர்வாழ்ந்துகொண்டிருகிறார். உள்ளப்பெருங்கோயிலில் உயிர்வாழும் அவருக்கு விளக்கேற்றி, அஞ்சலி செலுத்தி அவரை உயிர்நீத்தாராக்கத் தாயகத்தமிழர்கள் விரும்பவில்லை என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டவேண்டும். ■


SERENDIB
CARGO EXPRESS
personal touch
professional service
PAY FOR 1
GET 1 FREE!!!
Pay AUD$ 60 for 1 Box and get
another Box totally free!!
Door Delivery Charges - AUD$50
(Excluding Sri Lankan Tax)
GET YOUR PACKAGE
DELIVERED WHEN YOU
WANT IT!
AUD $12 per Kg (below 10Kg)
AUD $9 per Kg (above 10Kg)
Door Delivery Charges - AUD $1.90 per Kg
TIME TO PAMPER YOUR
LOVED ONES WITH
AUSTRALIAN PRODUCTS
Tell Us What You Need - We'll Buy It & Ship It!
Delivery to their doorstep
within 7 days!!
Cargo will be collected at the Address:
Unit 147, 170 Foster Road,
Mount Waverly, Melbourne, Australia
CONTACT
+61 402 703 080
+61 421 208 739
info@serendibworldwide.com
Shipments leaving on the
15th of every month

# ஆகஸ்ட்-02 இல் நடந்தேறிய 'நிழலாடும் நிஜங்கள்'!

























தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னெடுப்பில் தமிழர் தாயகத்தில் செயல்படுத்தப்படும் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்கும், மாவீரர் பெற்றோர் பராமரிப்பிற்கும் உதவும் நோக்கில் 'நிழலாடும் நிஜங்கள்' என்ற நாட்டிய நடன நிகழ்வு ஆகஸ்ட் 02 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

இந்நடன நிகழ்வு Joan Sutherland Performing Arts Centreஇல் மாலை 6 மணிக்கு அகவணக்கத்தோடு ஆரம்பமானது.

2006 ஆகஸ்ட் 14 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கான நினைவு வணக்கமும் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, தாயகத்தில் நடைபெற்றுவரும் கல்வித்திட்டம் மற்றும் மாவீரர் பெற்றோர் பராமரிப்பு பற்றிய விபரங்கள் அனைவருக்கும் காட்சிப்படுத்தப்பட்டது.

நிழலாடும் நிஜங்கள் 'சிதைந்த நிலத்தில் சலங்கை ஒலி' என்ற நாட்டிய நடன நிகழ்வு அனைவரும் பாராட்டும் விதத்தில் சிறப்பாக அரங்கேறியது.

● சுகந்தன் இரத்தினம்

# திசை திருப்பப்படும் செம்மணி மனிதப்புதைகுழி: சிஐடி களமிறக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து 140 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளில் அதிகமானவை சிறுவர்களுடையதாக இருக்கலாம் என்கிற சந்தேகம் மிகுந்த கவனிப்பை ஏற்படுத்தியுள்ளது கடந்த காலத்தில் இலங்கையின் அரச படை தமிழ் மக்கள் மீது எவ்வாறானதொரு குரூர போரை நடத்தியிருக்கிறது என்பதற்கு சாட்சியாக செம்மணி உலகின் முன் பேசத்தொடங்கியிருக்கின்றது.

இரண்டாம் கட்ட அகழ்வில் 31 நாட்களைக் கடந்துள்ள நிலையில் தற்போது அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட அகழ்விற்காக நாற்பத்தைதந்து நாட்கள் கால எல்லைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அதில் 31 நாட்களுக்கான அகழ்வுகள் நிறைவடைந்திருக்கின்றன. மிகுதி அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இடம்பெற்ற இரண்டாம் கட்ட அகழ்வுகளின் போது மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளைவிட இனிவரும் நாட்களில் இடம்பெறவுள்ள அகழ்வுகளின்போது அதிகளவு மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆயினும் இந்த இரண்டாம் கட்ட அகழ்வுகளோடு, செம்மணி அகழ்வுப் பணிகள் நிறுத்தப்படவும் வாய்ப்புக்கள் அதிகமாக உண்டு.

செப்ரெம்பர் மாதத்திற்குப் பின்னர் மழைக்காலம் தொடங்கிவிடும் என்பதால் செம்மணியில் அகழ்வுகளை மேற்கொள்ள முடியாதுபோகும். அதேபோல அரசு செம்மணி அகழ்வுக்கு ஒதுக்கிய நிதியானது இரண்டாம் கட்ட அகழ்வுடன் தீர்ந்துவிடும். எனவே மூன்றாம் கட்ட அகழ்வுகள் இடம்பெற வேண்டுமெனில் புதிதாக நிதியொதுக்கப்படல் வேண்டும். ஆகவே மீட்கப்படவுள்ள 160இற்கு உட்பட்ட மனித எலும்புக்கூடுகளுடன் செம்மணி அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வரலாம்.

செம்மணி அகழ்வுப் பணிகள் சர்வதேச கவனிப்பைப் பெற்றிருக்கின்ற போதிலும், இலங்கை அரசு வழமையான தனது வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, செம்மணி விடயத்தைத் திசைதிருப்பும் நடவடிக்கைளையும் முடக்கியுள்ளது. குறிப்பாக செம்மணி விசாரணை விடயத்தை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைத்திருக்கின்றது.

1996ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டமைக்கும், காணாமலாக்கப்பட்டமைக்கும் குற்றப்புலனாய்வுத்துறையினருக்கு நெருக்கமான தொடர்புகள் இருந்திருக்கின்றன. மாணவி கிருசாந்தி வழக்கின் குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச இதனை தனது வாக்குமூலத்திலும் வெளிப்படுத்தியிருந்தார்.

அரியாலை பகுதியில் கடத்தப்பட்ட இளைஞர்களைக் கொன்று புதைத்தமைக்கு பொறுப்பான குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குரிய படையதிகாரிகளின் பெயர் விபரங்கள்கூட வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் குற்றம் புரிந்தவனையே அதனை விசாரிக்கவும் நியமித்திருக்கின்றமையானது மீனுக்கு காவலாகப் பூனையை நிறுத்தியது போலாகும் என விமர்சிக்கப்படுகின்றது.

இப்போது செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தை விசாரணை செய்துவரும் குற்றப்புலனாய்வுத்துறையினர், இந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டுள்ள அனேக மனித எலும்புக்கூடுகள் முறைப்படி புதைக்கப்பட்டவை என்பதை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். அதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள இறப்புக் கிரியைகள் செய்கின்ற பிரபல பூசாரியிடம் விசாரணைகளை முன்னெடுத்திருக்கின்றனர்.





சைவ சமய மரபுப்படி இறந்த ஒருவரை புதைக்கும்போது என்னென்ன சடங்குகள் செய்யப்படும், என்னென்ன பொருட்களை சடலத்தோடு இட்டு புதைப்பர் போன்ற தகவல்கள் எல்லாம் பெறப்பட்டுள்ளன. செம்மணி அகழ்வுக் குழிகளிலிருந்து மீட்கப்பட்ட சடலங்களோடு காணப்பட்ட குழந்கைளின் எலும்புக்கூடுகளோடு பொம்மை, புத்தகப் பை, பால் போத்தல், நாணயம்,தாயத்துப் போன்ற பொருள், குழந்தைகயின் துணிகள், உடைகள், பொலித்தீன் உள்ளிட்ட 54 தடயப்பொருட்கள் மீட்கப்பட்டன. இந்தத் தடயப்பொருட்களுக்கும் முறைப்படி புதைக்கப்படுவதற்கும் இருக்கின்ற தொடர்புகள் குறித்தும் ஆராயப்படுகின்றன.



ஏற்கனவே செம்மணி மனிதப் புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்டுள்ள குழந்தைகளின் எலும்புக்கூடுகள் மக்கள் மனதில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளன. அரச படைகளின் குரூரத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றன. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைதான் என்பதை நிரூபிப்பதைத்போல இந்த எலும்புக்கூடுகள் காணப்படுகின்றன. எனவே அரசுக்கு அழுத்தம் தருகின்றவகையில் அமைந்திருக்கின்ற குழந்தைகளின் எலும்புக்கூடுகளை மட்டுமாவது முறைப்படி சித்துபாத்தியில் புதைக்கப்பட்டவை என்கிற வகையறாவுக்குள் கொண்டுவந்து, இந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க அரசு கடுமையாக முயற்சிக்கிறது.


அதேபோல செம்மணி மனிதப்புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட 54 தடயப்பொருட்களையும் பொதுமக்கள் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றும் கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்பட்டது. இலங்கையில் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தைக் கையாளுவதற்காக அரசு உருவாக்கியுள்ள காணாமல் போனோர் அலுவலகம் இந்த ஏற்பட்டினை நீதிமன்றத்தின் வழிகாட்டலுடன் செய்திருந்தது. சான்றுப்பொருட்களை வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர் நேரடியாக வந்து பார்வையிட்டு, அந்தப் பொருட்களுக்கும் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கும் தொடர்புள்ளதா என்பதை அடையாளப்படுத்தலாம் எனக் கூறபட்டிருந்தது.

நான்கு மணித்தியாலங்கள் வழங்கப்பட்ட இந்த சான்றுப்பொருட்களை அடையாளம் காட்டும் நிகழ்வில் 200 இற்கும் மேற்பட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர் கலந்துகொண்டிருந்தனர். அவர்களில் யாரும் சான்றுப் பொருட்களை அடையாளம் காட்டவில்லை. அந்தப் பொருட்களைப் பார்த்து அழுதுவிட்டு, மிகுந்த கவலையோடு வீடு திரும்பிய சம்பவமே அன்று இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் 1996ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டுவரை இளைஞர், யுவதிகள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். 1996ஆம் ஆண்டில் காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடிய உறவினர்களில் பலர் இன்று உயிரோடில்லை. இன்னும் பலர் குடும்பம்குடும்பமாக புலம்பெயர்ந்துவிட்டனர்.

இந்நிலையில், காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான சான்றுப்பொருட்களைக் காட்சிப்படுத்தி, ஆதாரங்களைத் திரட்டும்போது, அனைத்துத் தரப்பினரையும் அழைக்க வேண்டும். அதற்கு நீண்டதொரு கால நீடிப்பை வழங்கவேண்டும். நிரந்தரமானதோர் இடத்தில் இந்த சான்றுப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டாலே புலம்பெயர் தமிழர்களும் தடயப்பொருட்களை அடையாளம் காண வாய்ப்பேற்படும். குறைந்தபட்சம் இணையதளங்கள் ஊடாகவாவது இந்தத் தடயப்பொருட்களை அடையாளம் காணும் வாய்ப்புகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவையெதுவும் ஏற்படுத்தப்படாது மதியம் 01 மணியிலிருந்து மாலை 05 மணி வரையிலான நான்கு மணிநேரங்களே இவ்வளவு பாரிய மனிதப் புதைகுழியின் சான்றுப்பொருட்களை பொதுமக்கள் அடையாளம் காண வழங்கப்பட்டது.

அரசு காணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும், மனிதப் புதைகுழி விடயத்திலும் மிகுந்த அக்கறையோடு செயற்படுகின்றது, சான்றுப்பொருட்களை அடையாளம் காணக்கூட பொதுமக்களுக்கு வாய்ப்பை வழங்கியிருக்கின்றது என்கிற தோற்றப்பாட்டை சர்வதேச சமூகத்தின்முன்பாக ஏற்படுத்தவே இந்த நாடகம் நிகழ்த்தப்பட்டதாகவே பார்க்கப்படுகின்றது.

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டத்தின் இறுதி நாட்களில், செம்மணி பகுதியில் வேறு இடங்களிலும் மனிதப் புதைகுழிகள், மனித எச்சங்கள் காணப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதற்கான ஸ்கானிங் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. முதலில் பாதுகாப்பு அமைச்சிடம் குறித்த ஸ்கானிங் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயந்திரம் கோரப்பட்டபோதிலும், பாதுகாப்பு அமைச்சு கால இழுத்தடிப்பையே மேற்கொண்டது. எனவே ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஸ்கானிங் இயந்திரம் எடுத்துவரப்பட்டு, செம்மணி அகழ்வுப் பகுதிகள் ஸ்கானிங் செய்யப்பட்டன.





இந்த ஸ்கானிங் நடவடிக்கையின்போது மேலும் பல இடங்களில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. ஆயினும் இந்த ஸ்கானிங் தொடர்பான முழுமையான அறிக்கை இம்மாம் 14ஆம் திகதி நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களும், 1996,1997,1998, 1999ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வசித்தவர்களும் செம்மணி வெளி முழுவதுமே இராணுவ முகாம்கள் இருந்தன எனவும், அந்தப் பகுதிகளிலெல்லாம் மனிதப்புதைகுழிகள் இருக்க வாய்ப்புள்ளதெனவும், செம்மணி வெளி முழுவதுமே ஸ்கானிங் செய்யப்படவேண்டும் எனவும் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

ஆனால் தற்போது செம்மணியின், சித்துப்பாத்தி மயானத்தின் எல்லைக்குள் மாத்திரமே ஸ்கானிங் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு சித்துப்பாத்தி மயானத்திற்குள் மாத்திரம் ஸ்கானிங் செய்துவிட்டு, அங்கு புதைக்கப்பட்டுள்ள மனித எச்சங்கள் அனைத்தும் முறைப்படி அடக்கம் செய்யப்பட்டவை என்கிற கதையை உலகிற்கு சொல்வதற்குத்தான், ஸ்கானிங் செய்யப்பட்ட இடத்தை அரசு சுருக்கிக்கொண்டதா என்கிற கேள்வியும் இவ்விடத்தில் எழாமலில்லை.

# 80 ஆண்டுகளுக்கு பிறகு ஹிரோஷிமா
# உலகின் முதல் அணுகுண்டு விழுந்த நாள்!

● ஜங்கரன் விக்கினேஸ்வரா

மனித குல வரலாற்றில் நிகழ்ந்த மிகக் கொடூரமான இந்த சம்பவம், உலகளாவிய ஆயுதக் குறைப்பு மற்றும் அமைதி ஆகிய முயற்சிகளுக்கு வழிவகுத்தது. இதுவே, அணுசக்தி இல்லாத உலகம் என்ற எண்ணத்தை நோக்கி நகரவைத்தது. ஆனாலும் இந்த எண்ணங்கள் சாத்தியமானவையா என்பதில் சந்தேகமே மிஞ்சுகிறது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் காலப்போக்கில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது பற்றிய கவலை ஒரு பெரிய உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்தது. தற்போது ஒவ்வொரு ஆண்டும் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி அணுகுண்டுத் தாக்குதலுக்கான தினத்தில் அதில் பாதிக்



கப்பட்டவர்களின் நினைவாக கௌரவிப்பதுடன், அமைதியை முன்னெடுப்பதற்காக பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றன. இந்த வருடமும் பல நாடுகளில் அமைதி வேண்டி பல நகரங்களில் கவனவீர்ப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

**ஹிரோஷிமா - நாகசாகி கற்றுத் தரும் பாடம்**

உலக வரலாற்றில் அதிக சேதத்தையும், அதிக படிப்பினையையும் இரண்டாம் உலகப் போரே கற்றுக்கொடுத்தது. சூரியன் உதிக்கும் நாடு எனப் பெயர் பெற்ற ஜப்பான், இத்தாலி ஜேர்மனியுடன் கைகோர்த்து உலக நாடுகளை அச்சுறுத்தி வலம்வந்தன.

1941 டிசம்பர் 11 வரை அமெரிக்கா மறைமுகமாக பிரிட்டனுக்கு உதவினாலும் நேரடியாகக் களத்தில் இறங்கவில்லை. அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க நினைத்த ஜப்பான் அமெரிக்க போர்க் கப்பல்கள் அணிவகுத்து நிறுத்தப்பட்டிருக்கும் (Pearl harbour ) துறைமுகத்தை சிதைத்து விட்டால் அமெரிக்காவை ஒடுக்கிவிடலாமென நினைத்து ஜப்பானிய போர் விமானங்கள் குண்டுமழை பொழிய 2,000-க்கும் மேற்பட்ட வீரர்கள் உயிரிழந்தனர். இதன்பின்தான் நேரடியாகப் போரில் குதித்தது அமெரிக்கா.

இந்தத் தாக்குதலின் பின்னரே 1942ஆம் ஆண்டு அணுகுண்டு தயாரிக்கும் மான்ஹாட்டன் திட்டத்தை ரகசியமாகச் செயல்படுத்தியது. 1940-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட புளூட்டானியம் அமெரிக்க அணுகுண்டு தயாரிப்புக்கு உதவியது. யுரேனியத்தை நியூட்ரான்களின் தாக்குதலுக்கு உட்படுத்துவதன் மூலம் புளூட்டோனியம் பெறப்பட்டது.

மூன்று ஆண்டுகளில் 1945-ம் ஆண்டு அணுகுண்டை முதலில் சோதித்துப் பார்த்தது அமெரிக்கா. எப்படியாவது ஜேர்மனிக்கு முன் கண்டுபிடித்துவிட வேண்டும் எனும் யூகம் வெற்றியைத் தந்தது. ஒரு சாதாரண குண்டை விட பத்து இலட்சம் மடங்கு சக்தி வாய்ந்ததாக அது இருந்தது.

1945இல் சோவியத் படைகளிடம் ஹிட்லர் தோல்வியுற்ற பின் ஜேர்மனியும் சரணடைந்தது. ஜப்பானுக்கு 1945 ஆகஸ்ட் 3ஆம் திகதி காலக் கெடுவாக அமெரிக்கா விதித்தது. அதைப் புறக்கணித்ததால் அணுகுண்டைப் பயன்படுத்தி ஜப்பானை பணியவைக்க அதிபர் ட்ரூமன் முடுவெடுத்தார்.

**அணுகுண்டை எங்கு வீசுவது?**

ஜப்பான் மீது அணுகுண்டை பிரயோகிக்க முடிவெடுத்த பின் எங்கு வீசுவது என்ற கேள்வி எழுந்தது.

மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதி, நகர மையப்பகுதி, அரண்மனைகள், ஆலயங்கள் என விவாதித்து இறுதியில் நாகசாகி, கொகுரா, ஹிரோஷிமா, கியோட்டோ, நீகேடா எனும் ஐந்து நகரங்கள் தேர்வாகின.

சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து இன்டியானா பொலிஸ் கப்பல் மூலம் யுரேனிய குண்டிற்கான மூலப்பொருள்கள் வந்தடைந்தன. ஹிரோஷிமா ஹேன் சூ தீவில் அமைந்துள்ள

**எண்பது வருடங்களுக்கு முன்பாக, 1945 ஆகஸ்ட் 6ம் திகதி உலக வரலாற்றில் யாரும் மறக்கமுடியாத உலகின் முதல் அணுகுண்டு தாக்குதல் நடத்தப்பட்ட நாளாகும். இத்தாக்குதலின் பின்னரும், 'மீண்டெழுதல்' என்று சொல்லுக்குப் பெயர் போன ஜப்பானில், இன்று அதே ஹிரோஷிமா மற்றும் நாகசாகி இரண்டும் உயர் வளர்ச்சி அடைந்த நகரங்களாக இருக்கின்றன.**


நகரம் ஹிரோஷிமா. 73 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் 2 லட்சத்துக்கும் மேல் மக்களைக் கொண்ட நகரம்.

1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் 6ஆம் நாள் காலை எப்போதும் போல் விடிந்தது அம்மக்களுக்கு. காலை 8.15 மணிக்கு என்ன நடக்கப் போகிறதெனத் தெரியாமல் மக்கள் எப்போதும் போல் இயங்கிக்கொண்டிருந்தனர். வானில் மூன்று விமானங்கள் பறந்தன.

ஹிரோஷிமாவில் வானிலை தெளிவாக இருப்பதாகத் தகவல் கிடைத்தவுடன் கர்னல் டிப்பெட்ஸூம், உடன் ராபர்ட் லூயிஸூம் உலகின் முதல் அணுகுண்டை பிரயோகிக்கப் போகிறோம் என்ற இறுமாப்புடன் பறந்தனர்.

நிலத்தில் வெடிக்காமல் 1,850 அடி உயரத்திலேயே வெடித்தன. விமானிகள் பாதுகாப்புக் கண்ணாடிகளை அணிந்து பார்வையிட்டனர். எனினும், பேரொளிக்குப் பின் எங்கும் புகை மண்டலமாகவே இருந்தது. 1 கி.மீ பரப்பிலிருந்த ஆயிரக்கணக்கான கட்டடங்கள் விழுந்தன. ஹிரோஷிமாவில் இருந்த 60,000 கட்டடங்கள் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதலில் 1,40,000 பேர் உடனடியாய் இறந்தனர். குண்டு வெடித்த மையத்தில் பாரியவெப்பக் கதிர் நிலவியதால் உடல்கருகி இறந்தனர். ஒன்றரை கிலோமீட்டர் தூரத்துக்கு



வெப்பம் இருந்தது. 16 மணி நேரம் கழித்து அமெரிக்கா அணுகுண்டு வீசியதை அறிவித்தது.

அதுவரை என்ன வகை குண்டென்றே யாருக்கும் தெரியவில்லை. குண்டு வெடித்த துயரம் அடங்கியவுடன் கதிர்வீச்சு ஆரம்பித்து. இதில் பல ஆயிரம் பேர் மாண்டனர். நகரை விட்டு தள்ளி இருந்தவர்களும் தப்பவில்லை.

**அடுத்த இலக்கு நாகசாகி:**

ஹிரோஷிமா பேரழிவுக்குப் பின் ஒகஸ்ட் 9ஆம் நாள் டோக்கியோவில் ஜப்பான் தலைமை குழு கூடி நேச நாடுகளிடம் சரணடைய விவாதித்தனர். சரணடைய காலதாமதம் ஆனதால் அமெரிக்க நாகசாகியில் ஒகஸ்ட் 9ஆம் திகதி காலை 11 மணிக்கு பட் மான் ( FAT MAN ) எனும் புளூட்டோனியம் குண்டை வீசியது.

அதே அளவு உயிர்சேதம் இங்கும் நிகழ்ந்தது. ஜப்பான் நிலைகுலைந்து போனது. இதற்குப் பின்னும் சரணடையாவிட்டால் செப்டெம்பரிலும் ஒக்டோபரிலும் மீண்டும் குண்டு



வீச இரு திட்டங்களை வைத்திருந்தது அமெரிக்கா.

ஆனால், ஜப்பான் 1945 ஒகஸ்ட் 15ஆம் நாள் மன்னர் ஹிரோஹிடோ ரேடியோ மூலம் தன்னம்பிக்கை உரையாற்றினார். செப்டெம்பர் 2ஆம் திகதி போர்நிறுத்தத்தில் கையெழுத்திட்டது. உயிர்தப்பியவர்கள் மரணத்திலிருந்து தப்பித்தாலும் கதிரியக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புதான் அதிகம். பல குழந்தைகள் பிறப்பிலேயே ஊனமாகப் பிறந்தனர். தழும்புகளுடன் இன்னும் வாழ்கின்றனர். இருநகரமும் அணு ஆயுதத்தால் உருவாகும் பேரழிவை உலகுக்கு உணர்த்தும் வரலாறாக உள்ளது.

**அமெரிக்கா எச்சரிக்கை இன்றி வீசிய அணுகுண்டு:**

1945இல் ஒகஸ்ட் 6ஆம் திகதி ஜப்பான் மக்கள் எதிர்பாராத சமயத்தில், எந்தவொரு எச்சரிக்கை அறிவிப்பும் விடுக்காமல், ஹிரோஷிமாவில் 'லிட்டில் பாய்' என்ற பெயரில் முதல் அணுகுண்டை போட்டது என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

1939இல் தொடங்கிய இரண்டாம் உலகப் போர், 1945இல் முடிவை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த நேரம் அது. ஆனால் இடைப்பட்ட இந்த ஆறாண்டு காலமும், நாடுகள் அணியில் இடம்பெற்றிருந்த ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கும், நேச நாடுகள் அணியில் இடம்பெற்றிருந்த பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கும் கடுமையான போர் நடைபெற்றது.

இதில், சோவியத் யூனியனும் ஜேர்மனிக்கு எதிராக நேச நாடுகளுடன் இணைந்து போரிட்டது. இந்தக் கடும் போரில் இலட்சக்கணக்கான உயிர்கள் மடிந்தன.

ஆனால் 1945 மே மாதம், ஹிட்லரின் ஜேர்மனி நாஜி படை ரஷ்யாவிடம் சரணடைந்ததையடுத்து பெரும்பாலான பகுதிகளில் போர் முடிந்திருந்தது.

ஆனால், ஆசியாவில் போர் நீண்டுகொண்டிருந்தது. அதனால், ஜப்பான் மீது அணுகுண்டு வீசி போரை முடிவுக்கு கொண்டுவர முடிவெடுத்தது அமெரிக்கா.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னர் ஜப்பான் வேறுவழியில்லாமல், நேச நாடுகள் அணியிடம் சரணடையவே, இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. ஆனால், அமெரிக்காவின் அணுகுண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட உயிரிழப்பு, கதிர்வீச்சு பாதிப்பு ஆகியவற்றால் அந்த ஆண்டின் இறுதியில் பலி எண்ணிக்கை மட்டும் 1,40,000ஆக அதிகரித்தது.

குறிப்பாக, அந்த அணுகுண்டு தாக்குதலின் கதிர்வீச்சால் பாதிப்புக்குள்ளானவர்களின் சந்ததியினர் தலைமுறை தலைமுறையாக உயிரியல் குறைபாட்டுடன் பிறந்தனர்.

இயற்கை பேரிடராக இருந்தாலும், மனிதனின் செயற்கை பேரிடராக இருந்தாலும் 'மீண்டெழுதல்' என்று சொல்லுக்குப் பெயர்போன ஜப்பானில், இன்று அதே ஹிரோஷிமா மற்றும் நாகசாகி இரண்டும் வளர்ந்த நகரங்களில் ஒன்றாக உருவெடுத்திருக்கின்றன. மேலும், அணுகுண்டுத் தாக்குதலில் இறந்த ஆத்மாக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் அங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன.

■



# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.





**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# எதிர்ப்பக்கம்



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

### The Long Game - இலக்கை நோக்கிய நீண்ட விளையாட்டு

நாம் எல்லோரும் மகாபாரதத்தில் வரும் இந்தக் கதையினைப் படித்திருப்போம். துரோணர் பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களின் வில்வித்தை திறனை பரிசோதித்துப் பார்க்க விரும்பினார். எனவே ஒரு மரத்தின் உச்சியில் மரத்தாலான கிளி பொம்மையை தொங்கவிட்டு அவர்களை அழைத்து கிளியின் தலையைக் குறி பார்க்கும்படி கௌரவ, பாண்டவர்களிடம் கூறினார். முதலில் கௌரவர்கள், அடுத்து பாண்டவர்கள் என ஒவ்வொருவராக வரிசையில் வந்தனர். அவர்கள் அனைவரிடமும் துரோணர் ஒரே கேள்வியைக் கேட்டார், “உனக்கு என்ன தெரிகிறது ?” அவர்கள், “இலை, மரம், பறவை, வானம்” என பலவற்றையும் கூறினார்கள். ஆனால் அர்ஜுனனோ ”குருவே! எனக்கு அந்த கிளியின் கழுத்து மட்டுமே தெரிகிறது” என்றான். துரோணர் அம்பை விடச் சொன்னார். அம்பானது கிளியின் கழுத்தைத் தைத்து, அதை வீழ்த்தியது.

இந்தக் கதையானது இலக்கை நோக்கிய பார்வை கொண்டவன் மட்டுமே வெல்ல முடியும். மற்றவர்களெல்லாம் கவனச்சிதறல் மூலம் தங்கள் இலக்கினை தவற விட்டுவிட எல்லா வாய்ப்புகளும் இருக்கிறது என்பதை கூறும் நல்ல கதை. சிறுவயதில் படித்தது இன்னும் நினைவில் இருக்கிறது.

இதே கருத்தினை சொல்லும் படமொன்றை நெட்பிளிக்ஸில் பார்த்தேன். அருமை. அமெரிக்கர்கள் உண்மை நிகழ்வினை படம் பிடிப்பதில் சூரர்கள். அதிலும் விளையாட்டு சார்ந்த படமென்றால் சொல்லவா வேண்டும்.

The Long Game - இந்தப் படம் விளையாட்டினை பற்றியதென்றலும் அதுமட்டுமில்லாமல் நிறவெறி, இனவெறி, வர்க்கபேதங்கள் எல்லாம் எப்படி நம்மைப் புறக்கணித்தாலும், தொடர்ந்த முயற்சி ,அர்ப்பணிப்பு, குறிக்கோளில் மட்டுமே பார்வை கொண்டு ஓயாமல் உழைத்தால் நம்மை வெறுத்து ஒதுக்கியவர்கள் நம்மை ஏற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் மரியாதையும் செலுத்துவர் என்பதை மிகத் திறமையாகச் சொல்கின்றது.

நான் சுய முன்னேற்றப் புத்தகங்களை என்றும் படித்தது கிடையாது. ஆனால் வரலாற்று மற்றும் தன் வரலாற்று நூல்களை எப்படியும் படித்து விடுவேன். ஏனென்றால் வாழ்க்கையை விட வேறு சிறந்த பாடம் சொல்லும் நூல் ஏது? இந்தப் படத்தில் மிகச் சிறந்த வசனங்கள் உங்களை புல்லரிக்க செய்துவிடும். குறிப்பாக சிலவற்றை இங்கே தருகிறேன்.

“வாழ்க்கை என்பது கோல்ப் விளையாட்டு போலத்தான். சில நாட்களில் நல்ல இலகுவான பாதையில் ரம்மியமான பயணமாக இருக்கும். சில நாட்கள் வழிதவறி காட்டிற்குள் சிக்கி திக்குமுக்காடச் செய்துவிடும். இலக்கை நோக்கி மட்டுமே நமது பார்வை இருந்தால், எப்படியாவது தட்டுத்தடுமாறி நாம் வழி கண்டுபிடித்து மேலேறி விடுவோம்”

“வாழ்க்கை சிலசமயம் உங்களை நல்ல பாதையில் தள்ளும். சிலசமயம் படுகுழியில் தள்ளிவிடும். ஆனால் நீங்கள் எங்கு இருந்தாலும் அங்குள்ள விதிகளை பின்பற்றி ஆடவேண்டும். ஆனால் படுகுழியில் விழுந்தாலும் தன் சொந்த முயற்சியில் முன்னேறி வருபவனை யாராலும் தடுக்க முடியாது”

Golf is a game played on the 5 inch course .ie the space between our two ears. its a mental game. our opponents is not there in the field.its our mind. The best golfer isnt the one who got the nicest stuff. Its the one who can summon the will to keep swinging when things get tough. until your hands are bleeding , you got sweat on your face and sand in your eyes.but you keep moving towards that flag ( target) .”

அதாவது இலக்கை எட்டும்வரை நீண்ட விளையாட்டை நீங்கள் விளையாடவேண்டும். பார்வை இலக்கில் மட்டுமே இருக்கவேண்டும்.

Keep Playing Long Game !.

### நீதி கிடைக்க 1198 நாட்கள்

கர்நாடக மாநிலம் பெங்களூருவை அடுத்துள்ள தேவனஹள்ளியில் விண்வெளிப் பூங்கா அமைக்கப்படும் என அம்மாநில அரசு கடந்த 2024-ம் ஆண்டு அறிவித்தது. இதற்காக தேவனஹள்ளியைச் சுற்றியுள்ள 13 கிராமங்களில் 1,777 ஏக்கர் விவசாய நிலத்தை கையகப்படுத்துவதாக அறிவித்தது. இதற்காக விவசாயிகளுக்கு அதிக இழப்பீடு, வேலை வாய்ப்பு, மாற்று நிலம் ஆகியவற்றை வழங்குவதாக தெரிவித்தது. இதனை எதிர்த்து விவசாய சங்க கூட்டமைப்பினர் 1198 நாட்களாக உண்ணாவிரதம், சாலை மறியல், பேரணி என தொடர் போராட்டங்களை முன்னெடுத்தனர். இதனையடுத்து விண்வெளிப் பூங்காவுக்காக கையகப்படுத்தும் முடிவை கைவிடுவதாக கர்நாடக முதல்வர் சித்தராமையா அறிவித்துள்ளார்.

ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தை தேய்க்கும் படை - எவ்வளவு பெரிய அதிகார பலம் ,பண பலம் கொண்டு எதிர்ப்பினும் மக்கள் ஒருங்கிணைந்து போராடினால் வெற்றி நிச்சயம் என்பது மறுபடியும் நிரூபணம் ஆகியிருக்கிறது. பல்வேறு மிரட்டல்கள் , உயிரிழப்புகள் அனைத்தையும் தாண்டி மக்களின் உறுதி வெற்றி பெற்றிருக்கிறது.

கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டுகள் அதாவது 1198 நாட்கள் விடாது போராடிய அந்த மாவீரர்களின் மகத்தான மனோபலத்திற்கு தலைவணங்குகிறேன்.

### காற்றில் கலந்த யதார்த்த கம்யூனிஸ்ட்

தோழர்களிடம் கம்யூனிசம் என்றால் என்னவென்றால் பொதுவுடைமை என்பார்கள்.

கம்யூனிஸ்ட் யார் என்றால் மக்களுக்காக போராடுபவன் என்பார்கள்.

ஆனால் என்னிடம் யதார்த்த கம்யூனிஸ்ட் யார் என்று கேட்டால் வி.எஸ் என்றே சொல்வேன்.

வள்ளிக்கத்து சங்கரன் அச்சுதானந்தன் ( வி.எஸ் ) எனும் மகத்தான ஆளுமை நேற்று மறைந்துவிட்டார். அந்தச் செய்தியைக் கேட்ட தினத்தில் காலையில் இருந்து மாலை வேலை முடியும் வரை அலுவல்களுக்கு இடையிலும் வி.எஸ் பற்றி பல்வேறு நினைவுகள்.

எனக்கு இன்றும் நன்றாக ஞாபகம் இருக்கிறது. தோழரை முதன்முதல் பார்த்த தினம். 2001 மே மாதம் என்று நினைக்கிறன். நான் கோவையிலிருந்து எங்கள் ஊருக்கு (பாலக்காடு) பேருந்தில் சென்று கொண்டிருந்தபொழுது, பயணியர் அனைவரும் சகாவு ,சகாவு என்று கூக்குரல் இட்டுக்கொண்டு கையை ஜன்னல் வழியே அந்தப்பக்கம் காட்டினர். யாருடா அது என்று பார்த்தபொழுது வி.எஸ் - அங்குள்ள தேநீர்க்கடையில் மக்களோடு மக்களாக நின்று கொண்டு வாக்குச் சேகரித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதே அந்த எளிமை என்னை பற்றிக்கொண்டது. அதன் பிறகு எனது தந்தை ,தாத்தா மற்றும் பாலக்காட்டில் வாழும் எளிய விவசாயிகள் முதல் மார்க்சிய தலைவர்கள் மூலம் தோழர் பற்றிய பல்வேறு விஷயங்களை அறிந்துகொண்டேன். என் நெஞ்சில் நான் வரைந்த தோழரின் மகத்தான சித்திரம் அளப்பரிது.

கேரளாவில் நீங்கள் எந்த கம்யூனிஸ்ட் வீட்டிற்கு சென்றாலும் அவர்களுக்கு வி.எஸ் பற்றிச் சொல்ல கண்டிப்பாக ஒரு கதை இருக்கும். தொண்டர்களின் தோழர் .ஏழைகளின் நண்பன். ஒருங்கிணைந்த கம்யூனிஸ்ட் ஆரம்பித்த பொழுது இருந்த உயிரோடிருந்த கடைசி ஜோதியும் நேற்று அணைந்து விட்டது.

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த வி.எஸ் தொழிலாளர் இயக்கத்தில் சேர்ந்து மக்களுக்காக கடைசி வரை போராடியவர். வெற்றி ,தோல்வி என்பதெல்லாம் வெகு சகஜம். பல்வேறு போராட்டங்களுக்கு பிறகே ,அவரால் முதல்வராக முடிந்தது. அவர் முதல்வராக இருந்த 2006-2011 ஆண்டில் மக்களுக்கு தேவையான பல நல்ல திட்டங்களை கொண்டுவந்தார். கடைசி வரை கறை படியாத ஒரு கம்யூனிஸ்டாக வாழ்ந்தவர்.

Left Right Left படத்தில் முரளி கோபி “ இடது காலில் அடிபட்டு குறையிருந்தாலும் எனக்கு அந்தக் காலே போதும்.” என்று ஒரு கறை படிந்த கம்யூனிஸ்ட்டைப் பார்த்து சொல்வார். இந்தப் படமே ஒரு வகையில் வி.எஸ் மற்றும் பிணராயி இடையேயான மோதல் எவ்வாறு கருத்து முதல்வாத கம்யூனிசம் பொருள்முதல்வாத கம்யூனிசமாக ஆகிவிட்டது என்பதை சொல்லுவது தான். அங்கே சமரசமற்று விமர்சனம் செய்யும் மார்க்ஸியருக்கு இடமில்லை அது போன்று வி.எஸ் க்கும் கட்சியில் இடமற்றுப் போனது ( வழக்கம் போல வயது மூப்பினைக் காட்டி)

வி.எஸ்ஸின் சமரசமற்ற போக்கு கட்சியிலும் அவருக்கு எதிராக கேரளத்திலும் , இந்திய அளவிலும் பல்வேறு எதிரிகளை வளர்த்து விட்டது. ஆனால் அதற்கெல்லாம் கலங்குபவரல்லர் தோழர். ஏனென்றால் பிரிட்டிஷ் ஏகாதிப்தியத்தின் போது கேரள மன்னரின் ஆட்சியில் திவானின் காவல்துறையால் சித்திரவதைக்குள்ளாகி, காலில் குண்டு பதிந்து ஏறக்குறைய இறந்து போன நிலையில் இருந்து உயிர்த்தெழுந்த மார்க்கண்டேயன் அவர்.

கடைசி வரை ஒரு எளிய மக்களின் தலைவனாக ,சமரசமற்ற குரலாக, நேர்மையாக வாழ்ந்த அந்தப் பேரோசை இன்று காற்றில் கலந்துவிட்டது. அந்தப் பேரோசையினை நீங்கள் உற்றுக் கவனித்தால் உங்களால் கேட்க முடியும் சமரம் தன்னே ஜீவிதம் ( போராட்டமே எனது வாழ்க்கை) என்று.

லால் சலாம் சகாவே !!!

### நம்பிக்கைத் தொடர் ( Believe Cricket series )

நான் சச்சின் ,ட்ராவிட் ஓய்வு பெற்ற பிறகு ஏறக்குறைய இந்திய அணி விளையாடும் கிரிக்கெட் விளையாட்டுகளை பார்ப்பதையே நிறுத்திவிட்டேன். எப்போதாவது இங்கிலாந்து - ஆஸ்திரேலிய விளையாடும் விளையாட்டுகளோ, இல்லை டெஸ்ட் போட்டிகளை மட்டும் பார்ப்பேன். எனக்கு ரோஹித், விராட் ஆகியோரின் விளையாட்டு சுத்தமாக பிடிக்காது. ஏனென்று கேட்காதீர்கள். இந்த வு20 வடிவம் வந்தபிறகு கிரிக்கெட் விளையாட்டு நளினம் என்ற வகையிலிருந்து வெளியேறி வெறித்தனம் என்ற வடிவத்திற்கு சென்று விட்டது. உண்மையான கிரிக்கெட் ரசிகர்களுக்கு அது என்னவோ இழப்பு தான்.

நான் ஏற்கனவே கூறியபடி கிரிக்கெட் விளையாட்டின் சிறந்த வடிவம் என்பது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளே. நடந்து முடிந்த இங்கிலாந்து - இந்தியா கிரிக்கெட் தொடர் என்பது உண்மையிலேயே இந்திய அணிக்கு ஒரு சவால் தான். எந்தவொரு முன்னணி நட்சத்திர வீரர்களும் இல்லாது ஒரு குழுவாக நம்பிக்கையுடன் விளையாடி இந்த தொடரை 2-2 என்று சமன் செய்திருக்கின்றனர்.

இரு அணியினரும் கடைசி வரைக்கும் நம்பிக்கையுடன் விளையாடினர். காயம் பட்டிருப்பினும் அதைக் கண்டு கலங்காமல் விளையாடிய பண்ட் ,ஸ்டோக்ஸ் ,வோக்ஸ் என்று பல வீரர்களைச் சொல்ல முடியும். ஒரு அணியின் தலைவராக சுப்மன் கில் அருமையாக குழுவினை நடத்தியிருக்கிறார். அவரிடம் தன்னடக்கமும் , நம்பிக்கையும் நிறையவே இருக்கிறது. குறிப்பாக நான்காவது டெஸ்ட் போட்டியில் ஸ்டோக்ஸ் ஆட்டத்தை முடித்துக்கொள்ளலாம் எனும்போது கொஞ்சம் கூட தயங்காமல் ,வாஷிங்டன் மற்றும் ஜடேஜா 100 ரன்கள் அடிக்கும்வரை விளையாட விட்டது மிக அருமையான முடிவு. ஒரு தலைவனாக எல்லோர் மேலும் நம்பிக்கை வைத்தது இந்திய அணியில் இதற்கு முன்பு நான் பார்த்தது கிடையாது. இப்போது இருப்பது போன்றே எப்போதும் தலைக்கனம் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதே எனது விருப்பம்.

இங்கிலாந்து அணியினரும் அருமையாக விளையாடினர். பொறுமையின் சிகரமான ஜோ ரூட் சிறப்பாக விளையாடி 537 ரன்கள் குவித்தார். கடைசிப் போட்டியில் கிருஷ்ணாவின் பந்தில் அவசரப்படாமல் விட்டிருந்தால், இந்த தொடரின் முடிவே மாறியிருக்கும். டெஸ்ட் போட்டி என்பதே உங்களது பொறுமையையும், மனத்திறனையும் சோதிக்கும் ஆட்டமாகும். மிகச்சிறிய இலக்கினை மனதில் வைத்துக்கொண்டு அதனை நோக்கி நகர்ந்து பின்னர் உங்கள் இலக்கினை நகர்த்திக் கொண்டே செல்லவேண்டும். அதாவது 10,20, 30.... 100, 150, 200 ரன்கள் என்று விக்கெட்டினை இழக்காமல் விளையாட வேண்டும். ஒருவேளை ஸ்டோக்ஸ் கடைசிப் போட்டியில் விளையாடியிருந்தால் முடிவு மாறியிருக்கலாம். 17 விக்கெட்கள் மற்றும் 304 ரன்கள் குவித்ததோடு ஒரு சிறந்த கப்டனாக 3வது டெஸ்ட் போட்டியில் மிளிர்ந்தார். ஆனால் நான்காவது போட்டியில் ஆட்டத்தை முடிக்கச் சொல்லி அடாவடித்தனம் செய்தது சிறந்த விளையாட்டு வீரருக்கு அழகல்ல.

இந்தத் தொடரில் நமது நெஞ்சம் கவர்ந்தவர் நால்வர். மூன்றாவது போட்டியில் தனி ஒருவராக நின்றது,

(18ஆம் பக்கம் பார்க்க)



# ஏணிகளும் ஏங்குகின்றன

● சியாமளா யோகேஸ்வரன்

இரவும் பகலும் சந்தித்துக் கொள்ளும் அந்திமாலை மயங்கும் பொழுதில் ஒற்றைக்காலுடன் மைனா ஒன்று தத்தித்தத்தி புல்லுக்குள் முகத்தைக் கொடுத்து எதையோ தேடிக் கொண்டிருந்தது. இந்த மைனா இந்த வீட்டுக்கு ஒன்றும் புதிதல்ல. தயங்கித் தயங்கி உணவைத் தேடி வந்து பின்னர் பயமகன்று போய் வினோவின் தோழர்களாகி விட்டிருந்த இரட்டை மைனாக்களில் ஒன்றுதான் இந்த மைனா. மற்றைய மைனாவுக்கு என்னாகி விட்டது என்றும், தனது கால் ஏன் நொண்டியாயிற்று என்றும் இந்த மைனாவுக்குச் சொல்லத் தெரியவில்லை. ஒவ்வொரு நிமிடங்களாகத் துரத்திக் கொண்டிருக்க வேண்டிய தேவையின்றித் தூங்கும் நேரம் வந்து விட்டது என்று வினோவுக்கு நிம்மதியாக இருந்தது. ஆனால்,மரத்தில் ஏறிப் படுக்க முடியாத அந்த மைனாவுக்கு ஏதாவது ஆகி விடுமோ என்ற கவலையில் தனியே விட்டு விட்டுப் போகவும் மனது வரவில்லை. பக்கத்தில் போயும் விலகிப் போகாத மைனாவைப் பார்த்து வினோ உரக்கவே சொன்னாள்.

“இருட்டிப் போயிட்டுது. கூட்டுக்குப் போயிட்டு நாளைக்கு வா” மைனாவுக்கு இவளது மொழி புரியவில்லை. அப்போதும் அது அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தது. முன்பெல்லாம் பின் பக்கக் காணியிலிருக்கும் மரத்தில் இந்த மைனாக்கள் ஜோடியாகத் தூங்குவதைக் கவனித்திருக்கின்றாள். இப்போது அடர்ந்து வளர்ந்திருக்கும் மரவள்ளிச் செடியின் பின்னால் இந்த மைனா மட்டும் தனியாகத் தூங்குகின்றது. பின்வளவில் யாருமில்லா நேரத்தில் வேலி தாண்டி வரும் பூனையை நினைத்தால் தான் பயம். நீல நிற வானம் செந்நிறமாக மாறிப் பின்னர் மஞ்சளாக மாறி, ஒளி மறையும் வரை மேற்கு வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மைனா மெல்லப் பூமரங்களின் பின்னால் சென்று மறைந்ததும் வீட்டுக்குள் நுழைந்து லைட்டைப் போட்டாள்.

யாருமில்லாத அந்தத்தனிமை வெறுப்பாக இருந்தது. காதலித்த போது சுகமான நினைவுகளை அசை போடுவதற்குக் கிடைத்த தனிமை, இப்போதெல்லாம் கசக்கின்றது. சுகமான நினைவுகளை துரத்தி விட்டு சுமையான நினைவுகள் மொய்த்து கொண்டு விட்டதால் இப்போதைய தனிமை சுவைக்கவில்லை. நினைவுகளைச் சுரண்டிக் கொண்டிருப்பதால் இதயம் இற்றுப் போய் ஈடாடிக் கொண்டிருக்கின்றது.

சென்ற வருடம் வரைக்கும் வாழ்க்கை பெரிதாகக் கனக்காமல்தான் கழிந்து கொண்டிருந்தது. கணவன் மற்றும் இரண்டு பிள்ளைகளுக்கும் பிடித்ததென விதவிதமாகச் சமைப்பதிலும், வீட்டு வேலைகளிலும் பொழுது சரியாகப் போய்க் கொண்டிருந்தது. அடுத்தடுத்த வந்த வருடங்களில் பிள்ளைகள் இருவரும் பல்கலைக்கழகக் கல்விக்கென அடுத்த மாநிலத்துக்குச் சென்று விட்டிருக்க, வீட்டில் செய்வதற்கு அதிகமிருக்கவில்லை. இப்போதெல்லாம் வாரத்துக்கு இரண்டு தடவைகள் சமைத்தாலே போதுமாயிருக்கின்றது. வீட்டை எப்படித் துருவித் துருவிச் சுத்தம் செய்தாலும், துடைத்தெடுக்கத் தூசியும் அதிகம் இருப்பதில்லை. கணவன் அருண் உடலில் மிகுந்த கவனம் உடையவன். கண்டதையும் தின்று பெருத்து விட்டு ஜிம்மென்று அலையக் கூடாது என்று அடிக்கடி கூறிக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல் அதைக் கவனமாகக் கடைப்பிடிப்பவனும் கூட. பார்ப்பதற்கு இன்னும் இளமையுடன், சேர்ட்டுக்குள் அளவாக பொருந்தி ஐம்பதைத் தாண்டியவர்களைப் பெருமூச்சு விட வைக்கும் கட்டழகுடையவன். ஜிம்மில் அங்கத்தவனாக இருப்பதால் வேலை முடிந்து வந்ததும் ஜிம்முக்குக் கிளம்பி விடுவான்.

கணவன் மனைவிக்கிடையில் இருக்க வேண்டிய அந்தத் தோழமை உணர்வு ஏனோ இப்போது இல்லாமற் போய் விட்டது. ஓரிரு வார்த்தைகளுடன் கணவன் மனைவிக்கிடையேயான பேச்சுவார்த்தை முடிந்து போகின்றது. அதனால் நாட்பொழுதை மட்டுமல்லாமல், இரவுப்பொழுதையும் நெண்டித் தள்ள வேண்டியிருக்கின்றது.

வீட்டைச் சுற்றித் தோட்டம் போட்டால் கொஞ்சமாவது பொழுது போகும் என்று நினைத்து மரக்கறிச் செடிகளை நட்டு வைத்தாள். அவற்றுக்கான பசளை, கிருமி கொல்லி, விதைகள் என்பவற்றுக்குச் செலவாகும் பணத்துக்கு அறுவடை கிடைப்பதில்லை என்பதை அருண் அடிக்கடி சொல்லிக் காட்டிக்கொண்டிருக்கவே, தோட்டம் வளர்க்கும் ஆசை அற்றுப்போய் விட்டது.

இத்தனைக்கும் அருணுக்கும் வினோவுக்கும் ஒரே வயது தான். பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போதே வினோதான் தன் வாழ்க்கைத் துணை என்று தீர்மானித்து விட்டிருந்த அருணுக்குக் காலங்கள் கடக்கக் காதலும் கசந்து விட்டது போலும் என்று வினோ வருந்திக் கொண்டாள்.

திருமணம் நடந்து வெளிநாட்டில்தான் நல்ல வாழ்க்கை என்பதை ஒரே பிடியாகப் பிடித்துக் கொண்டு கனடாவுக்கு வந்து சேர்ந்தாயிற்று. வந்து சேர்ந்த மூன்று மாதங்கள் முடிவதற்குள் அருண், வினோ இருவருக்குமே வேலை கிடைத்து விட்டது. வேலைக்குப் போகத் தொடங்கிய ஐந்து மாதத்துள் வினோ கர்ப்பமானாள். வேலையை விட்டு விடும்படி வினோவின் அம்மாவும் அப்பாவும் சொல்லிக் கொண்டிருந்தார்கள், குழந்தை பெறும் வரை வேலை செய்து விட்டு பெறுபேற்று லீவை எடுத்து விட்டு மீண்டும் வந்து இணைந்து கொள்ளுமாறு வினோவின் வேலையிடத்தில் அறிவுரை சொன்னார்கள். வினோவின் வேலைத் திறமையால் வேலையிடத்தில் அவளை எல்லோருக்கும் பிடித்துப் போயிருந்தது.

மாதங்கள் ஏற முதற்குழந்தை ஆதலால் வினோக்கு ஏனோ பதற்றமாகவே இருந்தது. எட்டு மாதங்கள் கழிந்தவுடன், வேலையை விட்டு விடும்படி அருணும் சொல்லத் தொடங்கியிருந்தான். ஒன்பது மாதம் வரைக்கும் தாக்குப் பிடித்தவள் மீள வருவதாகச் சொல்லியே விடுப்பு எடுத்துக் கொண்டாள். குழந்தை நளினாவுக்கு நான்கு மாதமாகும் வரை கூடவே இருந்து கவனித்து விட்டு, வேலையில் மறுபடி இணைந்து கொண்டாள். அதற்குள் சில தொழினுட்ப மாற்றங்கள் வேலையில் வந்து விட்டிருந்ததால் வினோ அதைப் புரிந்து கொள்வதற்குச் சிரமப்பட்டாள். நளினா பகல் முழுவதும் தூங்கி விட்டு, இரவு பூராவும் விழித்திருந்து பால் கேட்டுச் சிணுங்கிக் கொண்டிருப்பாள். ஓரிரு நாட்கள் வினோவுடன் சேர்ந்து விழித்திருந்த அருண், தூக்கமில்லாமல் தன்னால் சரியாக வேலை செய்ய முடியவில்லை என்று கூறி இன்னொரு அறையில் படுத்துக் கொண்டான். வேலையிலும் கவனம் செலுத்த முடியாமல் நளினாவையும் சரியாகப் பார்க்க முடியாமல் போகவே, வினோ இறுதியில் வேலையை விட்டு விட வேண்டியதாயிற்று.

குழந்தையைக் காப்பகத்தில் விடுவது கட்டுப்படியாகாத செலவு என்ற கணவனின் கூற்றுச் சரியாக இருக்கவே, நளினா கொஞ்சம் வளரட்டும் என்று காத்திருந்த அந்த மூன்று வருட இடைவெளியில் கவினும் பிறந்து விட அவளது வேலைக்கனவு தள்ளிப்போய், பின்னர் எட்டாததாகவே போய் விட்டது.

அவ்வப்போது அருண் செலவைப் பற்றிப் பேசிய போதெல்லாம், தான் வீட்டுக்குச் சுமையோ என்று தோன்றத் தொடங்கியிருந்தது. தனக்கென எதையும் கேட்பதை அவமானமாகக் கருதினாள். மற்றைய பெண்களைப் போல் முடி வெட்டுதல், கால், கை நகங்களைப் பராமரித்தல் போன்ற எதற்கும் செல்லத் தோன்றவில்லை. ஓரிரு மாதங்களுக்குள் இமை மட்டும் களை போல் அடர்த்தியாக வளர்ந்து விடுவதால் இமைகளைச் சரிப்படுத்த என்று மட்டும் அவ்வப்போது போவாள். பூசியது போன்ற உடல் வாகென்றாலும், வினோ அழகானவள் என்பதால் அதிகப்படியான அழகுக்கவனிப்புத் தேவைப்படவில்லை. போகப்போக ஆடைகளைத் தெரிவு செய்யும் ஆசையற்றுப் போய், அருண் வாங்கி வருவது எதுவானாலும் உடுத்திக் கொள்ள வினோ பழகி விட்டாள்.

பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்ற பின்னர் மீண்டும் வேலைக்குப் போக வேண்டும் என்ற ஆசை துளிர் விட்டது. பிள்ளைகளின் படிப்புக்காக ரியூசனுக்குப் பணத்தை அள்ளிக் கொடுப்பதை விட, வினோவே கவனித்துக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்ட போது, வினோவுக்கும் அது சரியெனவே பட்டது. வேலையில் சாதிக்கலாம் என்ற தன்னம்பிக்கை போய் விட்டிருந்ததுடன், இத்தனை கால இடைவெளியின் பின்னர் வேலை கிடைக்குமா என்ற அச்சமும் ஒரு காரணமாயிருந்தது.

“வினோ, என்னப்பா? கூப்பிட்டது கேட்கேல்லையே” கணவனின் குரலில் வினோவின் நினைவுகள் கலைந்தன.

“கேட்கேல்லை, ரீ போடட்டே?” தனக்கும் அருணுக்கும் சேர்த்து தேநீரைக் கலக்கலாம் என்று கணவன் வருவதற்காகக் காத்திருப்பாள் வினோ.

“வேண்டாம் வினோ, நான் ஜிம்முக்குப் போக வேணும், ரெடியாகிக் கொண்டு வாறன்” அருண் படியேறி மேலே சென்று விட வினோ தனக்கு மட்டும் ரீயைக் கலந்து கொண்டாள்.

இறுகப் பிடித்த உடற்பயிற்சிக்கான ரீசேர்ட்டுடன் வந்தவன், வினோவின் ரீயில் வாய் வைத்து உறிஞ்சினான்.

“ஏனப்பா இவ்வளவு இனிப்பு? உடம்பைக் கொஞ்சமாவது குறைக்க வேணும் என்ற ஐடியா இல்லையே? இப்பவே எல்லாரும் எனக்கு அக்காவோ என்று கேட்கினம்.”

“ஏன் என்னையும் ஜிம்முக்குக் கூட்டிக்கொண்டு போகலாம் தானே? நீங்கள் மட்டும் ஜிம், விளையாட்டு என்று போனால் போதுமே? நானும் போனால் இளைப்பன் தானே?”

“எனக்கு கொம்பெனி பாதிக்காசு குடுக்குது. அதனாலை போறன், நீர் சும்மா இருக்கிற நேரத்தில வீட்டிலை ஏதாவது செய்து உடம்பைக் குறைக்கலாம் தானே?”

“செலவு எல்லாத்தையும் நான் பார்த்துக் கொள்ளுறன், நீ வீட்டிலை இருந்து குடும்பத்தைப் பார்த்துக் கொள் என்ற உங்கட கதையைக் கேட்டது தான் என்ர பிழை. அதுதான் நான் இன்றைக்கு இந்த நிலைமையில நிற்கிறன்” சொல்லிக் கொண்டிருக்கையில் வினோவின் கண்கள் நிறைந்தன.

“என்ன இப்ப உம்மட நிலைமை? உமக்கு இப்ப என்ன குறை வைச்சனான்? சும்மா திரும்பத் திரும்ப புறணி சொல்லிக் கொண்டிருக்காதையும்.” அருண் சொல்லிக் கொண்டு நிற்காமல் கிளம்பி விட்டான்.

வினோவுக்கு அழுகை வந்தது. எதற்காக என் சுயத்தை இழந்து எல்லாவற்றையும் விட்டு விட்டு இந்த நிலையில் நிற்கின்றேன்? நினைவுகள் அழுந்தப் பிடித்ததில் இருட்டி விட்ட பிறகும் எழுந்து உள்ளே செல்லத் தோன்றாமல் அமர்ந்திருந்தாள்.

நான் மட்டும் இந்த உலகில் தனித்து விட்டேனா? என்னைப் பற்றித் தேடுவார் யாருமில்லையா? கணவன் பிள்ளைகள் என்று மட்டும் என் உலகத்தைச் சுருக்கிக் கொண்டு வாழ்ந்து விட்டேனோ? பிள்ளைகள் கூடத் தாமாகப் போன் பண்ணிக் கதைப்பதில்லை. நானாக எடுத்தால் மட்டும் பேசுகின்றார்கள். ஏன் நான் செய்த தியாகங்களை யாரும் புரிந்து கொள்ளவில்லை?

அருண் ஜிம்மால் வந்து விட்டான் என்பதைக் கராஜ் திறக்கும் சத்தம் உணர்த்தியது. விசிலடித்தபடி வந்தவன் மேலே ஏறிச் சென்று விட்டான். அப்போதும் வினோவுக்கு எழுந்து செல்லத் தோன்றவில்லை. குளித்து முடித்திருக்க வேண்டும். “சுர் சுர்” என்று வாசனைத் திரவியத்தை அடிக்கும் சத்தம் கேட்டது.

எனக்கென்று ஒரு செண்ட் கூட இல்லை. இவர் இப்ப என்ன பொம்பிளை பார்க்கப் போறாரே? வினோவுக்கு அப்போதும் தன்னைப் பற்றிய சுய இரக்க எண்ணமே ஓடிக் கொண்டிருந்தது.

“வினோ, வாயேன் சாப்பிடுவம்” தலைக்குப் பக்கத்தில் அருணின் குரல் கேட்டதும் ஒரு நிமிடம் பயந்தே போய் விட்டாள். லைட்டைப் போட்டு விட்டுப் பக்கத்தில் அமர்ந்து கொண்டான் அருண்.

“ஏன் வினோ, விளக்கும் வைக்கேல்லை, அப்போதில் இருந்து இப்படியே இருக்கிறியா? எழும்பி முகத்தைக் கழுவு, சாப்பிடுவம்.”

“ஏன் முகத்தைக் கழுவினால் மட்டும் வடிவா வந்துடுவனே? சாப்பிட்டுச் சாப்பிட்டு நான் இன்னமும் குண்டாகிப் போனால் உங்களுக்கு அம்மாவோ என்று எல்லாரும் உங்களைக் கேட்பினமெல்லே?” வழமையாக ஒன்றுக்குப் பத்துத்தரம் யோசித்து அளவாக ஒற்றை வார்த்தை பேசுபவள்தான் வினோ. இந்தப் பேச்சு அவளது வழமைக்கு முரணானது.

“ஏனப்பா உமக்கு என்ன குறை? நீர் சும்மாவே வடிவு! வா சாப்பிடுவம்.” அருணுக்குத் தான் பேசியதன் எதிரொலி என்பது புரிந்து விட்டதால் சமாளித்தான்.

“எனக்கு ஒன்றும் வேண்டாம், என்னைப் பற்றி யாரும் கவலைப்படவேண்டாம்.”

“இஞ்சரப்பா, நீர் வீட்டுக்காக நிறையத் தியாகம் செய்திருக்கிறீர், அது சரிதான். எல்லாப் பொம்பிளைகளும் அப்பிடித்தானே இருக்கினம், சும்மா உம்மைத் தலையில தூக்கி வைச்சுக் கொண்டு ஆடோணும் என்று எதிர்பார்க்காதையும்.”

“நான் அப்பிடிக் கேட்கவேயில்லையே? இப்ப என்னாலை ஒரு பயனும் இல்லாதது போல நடத்துறதுதான் எனக்கு வலிக்குது, நான் இழந்ததுக்கு எல்லாம் ஒரு மதிப்பும் இல்லை என்றது போல இருக்குது.”

(18ஆம் பக்கம் பார்க்க)



# எதிர்ப்பக்கம்

*(16ஆம் பக்கத் தொடர்ச்சி)*

நான்காவது போட்டியில் சுந்தருடன் பொறுப்புடன் விளையாடி சமநிலைக்கு அடிகோலியது என்று ஜடேஜாவின் பங்களிப்பு அபாரம். வாஷிங்டன் சுந்தர் மூன்றாவது போட்டியில் நான்கு முக்கியமான விக்கெட்களை வீழ்த்தியது மற்றும் நான்காவது மற்றும் ஐந்தாவது போட்டியில் சிறப்பாக விளையாடியது இந்த தொடரைக் காப்பாற்ற உதவியது என்றால் மிகையல்ல. ரிஷப் பண்ட் அனைவரின் செல்லப்பிள்ளை. சதமடித்துவிட்டு அவரடித்த பல்டியினை மறக்க முடியுமா ?. காலில் காயம் ஏற்பட்ட பொழுதும் தைரியமாக அணிக்காக விளையாடியது சிறப்பு.

என்னடா இது நான்கு பேர் என்று சொல்லிவிட்டு மூன்று பேரினை மட்டுமே குறிப்பிட்டு இருக்கிறேன் என்று கேட்க வேண்டாம். அந்த சிராஜூடன் சேர்ந்து ஐவரானோம் (கில் உடன்). இந்தத் தொடரில் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அணிக்காக அர்ப்பணித்தவர் யாரென்றால் அது சிராஜ் மட்டுமே. மொத்தம் 1113 பந்துகள் . கிட்டத்தட்ட நான்கு ரி20 போட்டிக்கு தேவையான பந்துகளை இவர் ஒருவரே வீசியிருக்கிறார். அதுமட்டுமின்றி ஒரு பீல்டராக எத்தனை முறை பந்துகளை ஓடி தடுத்தார் என்பது கணக்கில்லை. இறுதிப்போட்டியின் பரூக் தந்த பிடியினை நழுவ விட்ட பிறகு சிராஜ் முகத்தினை பார்த்திருக்க வேண்டும். அதே போன்று மூன்றாவது போட்டியில் 22 ரன்களில் தோல்வி தழுவியபோதும் வாடி நின்றது மறக்க முடியுமா. இறுதி நாளன்று அட்கின்ஸன் விக்கெட்டினை வீழ்த்தி siuuuu என்று ரொனால்டோ போன்று கொண்டாடியது கண்கொள்ளா காட்சி. கால்பந்து போட்டியில் ரொனால்டோ போன்று இறுதி வரை விளையாடும் விளையாட்டு வீரரை பார்க்க முடியாது. அது போன்று ஆட்டத்தின் கடைசிப் பந்து வரை வெற்றிக்காக போராடிய மாவீரன் அஞ்சா நெஞ்சன் சிராஜ்.

தினேஷ் கார்த்திக் சிராஜிடம் கடைசி நாளன்று உங்களுக்கு எப்படி உத்வேகம் கிடைத்தது என்று கேட்டபொழுது , நான் இணையத்தில் தேடி ரொனால்டோ படத்துடன் நம்பிக்கை என்ற வாசகத்தை எனது அலைபேசியில் wallpaper ஆக வைத்து போட்டிக்கு முன்னே பார்த்துக்கொண்டேன். கடைசி வரைக்கும் நம்பிக்கை வைத்தேன் - நாம் ஜெயிப்போம் என்று”

இந்தத் தொடரினை டெண்டுல்கர் - ஆண்டர்சன் தொடர் என்பதை விட, இனிமேல் நம்பிக்கைத் தொடர் என்றே அழைக்க வேண்டும்.

ஆம் , நம்பிக்கை தானே எல்லாம்

This india vs England cricket series should be called “BELIEVE” series .

### AI இன் நிழலில் எவ்வாறு மன அழுத்தமின்றி வாழ்வது

மதுமிதா முர்கியாவின் “நிரல் சார்பு : AI இன் நிழலில் வாழ்வது” என்பது செயற்கை நுண்ணறிவு எவ்வாறு மனித வாழ்க்கையின் விதிகளை திருத்தி எழுதுகிறது என்பதைப் பற்றி ஆழமாகப் பதிவு செய்யப்பட்ட புத்தகமாகும். பைனான்சியல் டைம்ஸின் AI பற்றி எழுதும் இதழாளரான முர்கியா, AI ஐச் சுற்றியுள்ள புனைவுகள் மற்றும் மிகைப்படுத்தல்களுக்கு அடியில் புதைந்து கிடைக்கும் இருண்ட பக்கங்களை தோண்டி நமக்கு தெளிவுபடுத்தியிருக்கிறார் . தொழில்நுட்பம் நமக்கு கொடுக்கும் பொய்யான வாக்குறுதிகள் எவ்வாறு நமது நிஜ வாழ்க்கையில் மோதி குழப்பத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நமக்கு இந்த புத்தகத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.

இந்த AI தொழில்நுட்பத்தின் பின்னே எவ்வாறு மாபெரும் மனித உழைப்பு சுரண்டப்படுகிறது என்பதை ஆப்பிரிக்க நாடுகளுக்கு பயணம் செய்து openAI , meta,Tesla போன்ற பகாசுர கம்பெனிகளுக்காக labelling எனப்படும் தரம்பிரித்தல் வேலையை செய்யும் மக்களின் வாழ்க்கையை நமக்கு தருகிறார். இந்த மக்கள் வக்கிர, வன்முறை, வெறுப்பு பேச்சுக்கள் அடங்கிய பதிவுகள், வீடியோ போன்றவற்றை பார்த்து பிரிக்கும்போது கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகுகின்றனர். அவர்களுக்கு எந்தவொரு இழப்பும் கிடையாது. அதேவேளையில் deepfake எனப்படும் AI தொழில்நுட்பத்தால் எவ்வாறு ஒன்றுமறியா பெண்களின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்பதை படிக்கும்போது நமக்கு மனம் பதறுகிறது.

இந்த புத்தகம் நம்மை யோசிக்க வைக்கிறது. நமது தூக்கத்தை கலைக்கிறது இது தொழில்நுட்ப ஆர்வலர்களுக்கு மட்டுமல்ல, சமூக நீதி, மற்றும் நெறிமுறைகள் குறித்து அக்கறை கொண்ட எவருக்கும் அவசியமான புத்தகம். AI எந்த அளவுக்கு நமக்கு உதவியாக இருக்கும் அதேவேளையில், இந்த தொழில்நுட்பம் தவறானவர்களின் கைகளுக்கு போகும்போது எவ்வாறெல்லாம் சிக்கலுக்கு வழிவகுக்கும் என்பதை ஆராய்ச்சி மணி அடித்து உரக்கச் சொல்கிறது. அனைவரும் கண்டிப்பாக படிக்க வேண்டிய புத்தகம்.

---

# ஏணிகளும் ஏங்குகின்றன

*(17ஆம் பக்கத் தொடர்ச்சி)*

“கற்பனையில வாழாதையும், என்னைக் கொஞ்சம் நிம்மதியா இருக்க விடுமன். அதோட ஏழு மணிக்கு முதல் சாப்பிட வேணும். லேட்டாச் சாப்பிட்டுப் படுத்தால் அப்பிடியே வெயிட் போடும், வர்றீரோ சாப்பிட?”

சமாதானப்படுத்துவதை விட அருண் தன்னை நியாயப் படுத்தியதை வினோவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சும்மா வார்த்தைக்காவது தனது தியாகத்தை ஏற்றுக்கொண்டிருந்தால், மனதுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்திருக்குமோ என்று தோன்ற மௌனமாயிருந்தாள்.

அங்கேயே அமர்ந்திருந்து போனை நோண்டிக் கொண்டிருந்த அருண் எழுந்து சென்று சாப்பாட்டைச் சூடு செய்யும் சத்தம் கேட்டது. தொலைக்காட்சியில் விவேக்கின் நகைச்சுவை ஓடிக்கொண்டிருக்கச் சாப்பிட்டு விட்டுத் தூங்கச் சென்று விட்டான்.

வினோவுக்கு இப்போது மனது மரத்து விட்டது. சாப்பிடத் தோன்றவில்லை. படுக்கையில் படுத்துக்கொண்டுவிட்டபோதும் உறக்கம் வரவில்லை. ஒருக்களித்துப் படுத்திருந்தவள் அப்படியே அசையாமல் படுத்திருந்தாள். அருண் பல்லைத் துலக்கி விட்டு வந்து பக்கத்தில் படுத்துக் கொண்ட போது கட்டில் ஒரு முறை பலமாக அசைந்தது. சற்று நேரத்தில் கேட்ட அருணின் சீரான மூச்சுச்சத்தம் அவன் உறங்கி விட்டதை உணர்த்தியது.

வினோவுக்கு உறக்கம் வரவில்லை. எதற்காகப் பிறந்தோம்? யாருக்காக என்னைத் தொலைத்தேன்? ஏன் என் அருமை யாருக்கும் புரியவில்லை? அருண் சொன்னது போல் உண்மையில் நான் செய்தது பெரிதில்லையா? நான் தான் என்னைப் போல் யாருமில்லை என்று என்னை உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறேனா?

அதற்குத் தியாகம் என்று வேறு பெயர் சூட்டியிருக்கின்றேனா? கேள்விகள் சுற்றி வந்து தாக்கின. அதிகாலை வேளையில் தான் எதற்குமே பயனற்றவள் என்பதைத் தனக்குள் உறுதியாக்கிக் கொண்ட போது அழுகை வந்தது.

சூரிய வெளிச்சம் பரவத் தொடங்கிய போதில் படுக்கையை விட்டெழுந்தாள். மரம் போல் வீட்டுப் பணிகளைச் செய்து முடித்தாள். காலை உணவைச் சாப்பிட வந்த அருண் இவளது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அப்போதும் வினோவுக்குப் பேசத் தோன்றவில்லை.

“வினோ என்னப்பா இன்னும் யோசிச்சுக் கொண்டிருக்கிறீரே?” அருணின் கேள்விக்கு வினோ பதில் அளிக்கவில்லை. அருண் வேலைக்குக் கிளம்பி விட்டான்.

மகளை அழைத்தாள்.

“நளினா, எப்பிடி இருக்கிறாய்?”

“இருக்கிறனம்மா? என்ன இந்த நேரம் கோல் எடுத்திருக்கிறீங்கள்?”

“நான் தானே எடுக்க வேணும், நீங்கள் எடுக்கிறேல்லைத்தானே?”

“பிசியம்மா”

“நான் உப்பிடி எப்பவாவது சொல்லியிருக்கிறனே? என்னைப் பற்றி யோசிக்காமல் எவ்வளவு செய்திருக்கிறன், நன்றி என்றது கொஞ்சமும் உங்களுக்கு இல்லை.”

“என்னம்மா நடந்தது?”

வினோ போனை வைத்து விட்டாள். வைத்த அடுத்த ஐந்து நிமிடத்தில் மகன் கவின் அழைத்தான்.

“அம்மா எப்பிடியிருக்கிறீங்கள்?”

“என்ன நளினா ஏதாவது சொன்னவளோ? இல்லாட்டி அம்மாட ஞாபகமே உனக்கு வராது தானே?”

“அதுதான் சனிக்கிழமையில கோல் எடுக்கிறேனே? படிப்புக்கொஞ்சம் கூட அம்மா.”

“நான் உங்களுக்குக் கணக்குப் பார்த்தே செய்தனான்? எப்பிடியெல்லாம் பார்த்துப் பார்த்து வளர்த்தனான்”

“ஏனம்மா? இப்பிடி எல்லாம் கதைக்க மாட்டீங்களே? என்ன நடந்தது?”

பதில் சொல்ல விருப்பமில்லாமல் போனை வைத்து விட்டாள் வினோ.

பிள்ளைகளுடன் பேசியது கணவன் மாலையில் வந்த போது எதிரொலித்தது.

“ஏன் வினோ, உனக்கென்ன பைத்தியமே? பிள்ளைகள் பாவம். என்னத்துக்குப் பிள்ளைகளுக்குப் போன் எடுத்துக் கண்டதையும் கதைச்சுக் கரைச்சல் குடுக்கிறாய்?”

“எல்லாருக்கும் நான் இப்ப தேவையில்லாமல் போனன். ஒருவருக்கும் என்னில அக்கறையில்லை.” வினோ அழுது கொண்டே சொன்னாள்.

“வேலையில்லாட்டி இதுதான் பிரச்சினை, எங்களுக்கு ஆயிரம் அலுவல் இருக்குது. உன்னைப் போல சும்மா இருந்து யோசித்துக் கொண்டிருந்தால் உதுதான் பிரச்சனை” அருண் சூடாக சொல்லி விட்டு மேலே போய் விட்டான்.

தேற்ற யாருமின்றி வினோ நெடுநேரம் அழுது கொண்டிருந்தாள்.

சுய அலசல் தீராத வலியைக் கொடுத்தது. மகா தியாகம் என்று குடும்பத்துக்காகச் செய்தவை எல்லாம் இப்போது பெரும் கேலிக்கூத்தாகத் தெரிந்தன.

பசிக்கவில்லை, தூக்கம் வரவில்லை, எதையும் செய்யப் பிடிக்கவில்லை. அருணின் முகத்தைப் பார்க்கப் பிடிக்கவில்லை. செய்தவற்றுக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்திருந்தால் கூட இழந்தவை பெரிதாகத் தெரிந்திருக்காது என்று வினோ உள்ளுக்குள்ளேயே குமைந்து கொண்டிருந்தாள். யாரிடமும் தன் கவலைகளைப் பற்றிப் பேசப்பிடிக்கவில்லை, யாருமே புரிந்து கொள்ள மாட்டார்கள். பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று புத்திமதி சொல்வார்கள் என்பதால் தன் வீட்டினருக்கும் சொல்லத் தோன்றவில்லை. அருண் தன்பாட்டில் தன் வேலைகளைக் கவனித்துக் கொள்ள, வினோவுக்கு இன்னமும் குற்ற உணர்ச்சி கூடியது. தூங்காமல் படுக்கையில் இருக்கும் நேரங்கள் அதிகமாக, சுவரிடம் தன் கேள்விகளுக்கும் வேதனைகளுக்குமான நியாயத்தைக் கேட்கத் தொடங்கினாள்.

“வினோ, யாரோட கதைக்கிறீர்” கேட்டுக் கொண்டு அறைக்குள் வந்த அருண் திகைத்து நின்று விட்டான். அடுத்தகிழமை வினோ மனநல ஆலோசகரிடம் காண்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தாள். மனநல மருத்துவரிடம் பேசி விட்டு வந்த பின்னர் வினோ தனக்கு வெளியில் வழங்கப்படப் போகும் பெயர் பற்றிய தெளிவு வந்தது. தன்னைப் பற்றியும் கடந்த காலத்தைப் பற்றியும் தனது தியாகத்தைப் பற்றியும் எண்ணிக் கலங்குவதிலும் அடுத்தவரிடம் இருந்து அதற்கான மதிப்பை எதிர்பார்ப்பதிலும் அர்த்தமில்லை என்பது புரிந்து போனது.

அடுத்த வாரம் பக்கத்திலிருந்த கடைத்தொகுதியில் இருந்த கடைகளில் எல்லாம் சென்று வேலை கேட்டாள். ஒரு கடையில் காசாளாராக வேலைக்குச் சேர்ந்த போது அருண் “ஏன்?” என்று கேட்டுத் தன் வருத்தத்தைத் தெரிவித்தான். இரண்டு வாரங்களாக வீட்டில் எதையும் சமைக்கவில்லை. வாடிக்கையாளருடன் சிரித்துப் பேசுவதில் மனச்சுமை குறைவதை உணர்ந்தாள். மூன்றாம் வாரம் கழிந்த நிலையில் வீட்டுக்குள் நுழையும் போதே, கோழிக்கறியின் வாசம் வீட்டுக்குள் நிறைந்திருந்தது. அருண் மெதுவாகச் சமைக்கும் சாதனத்தில் மரக்கறிகளையும், கோழியையும் சோற்றையும், இதர சரக்குகளையும் போட்டுச் சமைத்திருந்த சாதம் அவனது பரிமாறலில் அமுதமாகத் தோன்றியது. கணவனின் முகத்தைப் பார்த்த போது அவன் இவளது பாராட்டுதலுக்காகக் காத்திருப்பது புரிய மென்மையாகத் தலை அசைத்துச் சிரித்தபடி,’ சாப்பாடு சூப்பர்” என்றாள்.

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling?
# Sell your home for only 1% Commision.

**We get you the best price, without the big commission — only 1%**

Call for a **free**, **no-obligation** market appraisal. **No hidden costs no gimmicks.** We look after **property management** as well.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au
Level 10, 14 Mason St, Dandenong VIC 3175

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au
Level 10, 14 Mason St, Dandenong VIC 3175

Terms and Conditions apply*


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198

# செம்மணிப் புதைகுழி; சர்வதேச நீதிகோரிப் போராட்டம்!

யாழ்.செம்மணி மனிதப் புதைகுழி பேரவலத்துக்கு சர்வதேச நீதிகோரி மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஆஸ்திரேலியா, கன்பராவில் நடைபெற்றது.

ஆஸ்திரேலியாவில் இயங்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போராட்டத்தில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள், மக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

ஆஸ்திரேலியாவிலுள்ள பன்நாட்டு தூதரகங்கள் மற்றும் ஐ.நா. அலுவலகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

“இலங்கையின் உள்ளகப் பொறிமுறைமீது நம்பிக்கை இல்லை. எனவே,சர்வதேச விசாரணையே உண்மையை வெளிக்கொண்டுவரும்.” எனப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

# சிட்னியை கிலிகொள்ள வைத்துள்ள G-7 பாதாளக்குழு!



சிட்னியில் புதிதாக உருவாகியுள்ள பாதாளக் குழுவொன்று தொடர்பில் நியூ சவூத் வேல்ஸ் மாநிலப் பொலிஸார் கழுகுப்பார்வை செலுத்தியுள்ளனர்.

சிட்னி தென்மேற்கு பகுதியை மையப்படுத்தியே இந்தக்குழு தோற்றம்பெற்றுள்ளது எனவும், ஜி- 7 என அந்தக்குழு தனக்குப் பெயர் வைத்துக்கொண்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

இந்தக்குழுவைச் சேர்ந்த 13 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி குழுவில் பெரும்பாலும் இளைஞர்களே உள்ளனர் எனவும், அவர்கள் சிட்னி முழுவதும் பொது இடங்களில் துப்பாக்கிச்சூடு, வீடுகளில் கொள்ளை, வாகனக் கொள்ளை போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

மேலும் சில பாதாளக்குழுக்களுடன் இவர்களுக்குத் தொடர்புள்ளது எனவும் தெரியவருகின்றது. இந்தக்குழுவினர் தொடர்பில் பொலிஸார் கழுகுப்பார்வை செலுத்தியுள்ளதுடன், விசாரணை வேட்டையும் தொடர்கின்றது.




# ட்ரம்பின் வரிப்போரில் தப்பியது ஆஸி!

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பில் இருந்து ஆஸ்திரேலியா தப்பியுள்ளது. அந்தவகையில் கன்பரா மீதான வோஷிங்டனின் வரி விதிப்பு 10 சதவீதமாக தக்கவைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பல உலக நாடுகளை இலக்குவைத்து புதிய வர்த்தக வரிகளை மார்ச் மாதம் அறிவித்திருந்தார்.

குறித்த வரி விதிப்பு ஓகஸ்ட் 1 முதல் அமுலுக்குவரும் நிலையில், சில நாடுகளுக்கு புதிய வர்த்தக வரி விதிப்புக்களை அறிவித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் ஆஸ்திரேலியா இடம்பெறவில்லை. ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீத பொது வரியை ட்ரம்ப் அறிவித்திருந்தார். எனவே, அந்த 10 சதவீதமே தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

‘ட்ரம்ப் நிர்வாகத்துடன் அல்பானீஸி அரசு நடத்திய இராஜதந்திர பேச்சுகளின் பலனாகவே இது நடந்துள்ளது” என்று ஆஸ்திரேலிய வர்த்தகத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, கனடா, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளுக்குரிய வர்த்தக வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

# ஆஸ்திரேலியாவின் முதல் ரொக்கெட் முயற்சி தோல்வி!

ஆஸ்திரேலியா முதன்முறையாக விண்ணில் செலுத்த முயன்ற ரொக்கெட் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

எனினும், விண்வெளித் துறையை நோக்கி ஆஸ்திரேலியா நகர்வதற்குரிய முக்கியமான பங்களிப்பாக இம்முயற்சி கருதப்படுகின்றது.

பிரிஸ்பேன் சோதனை தளத்தில் இருந்து வானில் பறந்த ரொக்கெட் 14 விநாடிகளிலேயே தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது.

கில்மோர் ஸ்பேஸ் டெக்னாலஜிஸால் ஏவப்பட்ட இந்த எரிஸ் ரொக்கெட் தான் ஆஸ்திரேலியாவில் இருந்து தயாரிக்கப்பட்டு விண்ணில் செலுத்த முயன்ற முதல் ரொக்கெட் ஆகும்.



இது சிறிய செயற்கைக்கோள்களை சுற்றுப்பாதையில் கொண்டுசெல்ல வடிவமைக்கப்பட்டது.

ரொக்கெட் கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இயந்திரக் கோளாறு காரணமாகவே இவ்விபத்து நடந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

முதல் முயற்சி தோல்வி அடைந்திருந்தாலும் அடுத்தக்கட்ட நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது எனத் தெரியவருகின்றது.

# புதிய தேசிய ஆணையாளர் நியமனம்



பூர்வகுடி குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான புதிய தேசிய ஆணையாளராக துணைப் பேராசிரியர் சூ ஆன் ஹண்டர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வருட இறுதிமுதல் அவர் தனது பணியைப் பொறுப்பேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பூர்வகுடி குழந்தைகள் வீட்டுக்கு வெளியில் பராமரிப்பில் இருப்பதற்கான வாய்ப்பு 10 மடங்காக அதிகரித்துள்ளது. அத்துடன், பூர்வகுடி இளைஞர்கள் காவலில் வைக்கப்படும் எண்ணிக்கையும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

அதேபோல பூர்வகுடிச் சிறார்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான தேசிய இலக்குகள் தொடர்ந்து பின்நோக்கிச் செல்கின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கில் லேபர் அரசால் இந்தப்புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் மற்றும் குடும்ப நல சேவையில் இரு தசாப்தங்களுக்கு மேலான அனுபவத்தை துணைப் பேராசிரியர் சூ ஆன் ஹண்டர் கொண்டுள்ளார். சிறந்த சமூக சேவகராகவும் பார்க்கப்படுகின்றார். யூறுக் நீதி ஆணைக்குழுவின் துணைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

பூர்வகுடி குழந்தைகளுக்கு ஏனைய குழந்தைகளைப் போலவே சமமான வாய்ப்புகள் கிடைப்பதை உறுதிசெய்வதை அரசாங்கத்தின் இந்நியமனம் பிரதிபலிக்கிறது என்று சமூக சேவைகள் அமைச்சர் தெரிவித்தார்.

# பூர்வகுடிகளின் துயர்நாளைக் கொண்டாடுவதா?

ஆஸ்திரேலிய பூர்வகுடிச் சமூகத்திலிருந்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு ஆடிய முதல் வீரரான ஜேசன் கில்லஸ்பி, ஜனவரி 26ஆம் திகதிஆஸ்திரேலிய தினம் என்று பலராலும் கொண்டாடப்படுவதைக் கேள்விக்கு உட்படுத்தியுள்ளார்.

ஜனவரி 26ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் அதிகாரபூர்வ தேசிய தினமாகும். இது 1788ஆம் ஆண்டு முதல் கடற்படை தரையிறங்கியதையும், சிட்னி கவ்வில் ஆர்தர் பிலிப் என்பவரால் கிரேட் பிரிட்டனின் யூனியன் கொடியை ஏற்றியதையும் கொண்டாடும் நாள்.

1788ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதிதான் பிரிட்டனின் 11 கப்பல்கள் ஆஸ்திரேலியாவுக்கு வந்திறங்கிய நாளாகும். இது ஆஸ்திரேலியாவை ஐரோப்பிய காலனி ஆதிக்கத்திற்கு கீழ் கொண்டுவந்த தினமாகும். இதில் குற்றவாளிகளை ஏற்றி கொண்டு வந்த கடற்படைக் கப்பல்கள் ஆறு. மற்ற கப்பல்களில் முதல் பிரிட்டன் குடியேறிகள் வந்திறங்கினர். இந்தக் கப்பல்கள் ஆர்தர் பிலிப்பின் தலைமையேற்று ஆஸ்திரேலியா வந்தன. நியூ சவுத் வேல்ஸ் முதல் தண்டனைக் காலனியாக நிறுவப்பட்டது.

முதல் தரையிறக்க தினமாகிய ஜனவரி 26ஆம் திகதியை ஆஸ்திரேலிய தினமாகக் கொண்டாடத் தொடங்கினர். 1988இல் ஜனவரி 26ஆம் திகதியை ஆஸ்திரேலிய தினமாக அனுசரிப்பது அதிகரித்தது. 1994ல் அனைத்து மாநிலங்களும் பிரதேசங்களும் முதல்முறையாக ஜனவரி 26ஆம் திகதி ஒருங்கிணைந்த பொது விடுமுறையைக் கொண்டாடத் தொடங்கின.

இந்நிலையில்தான் ஆஸ்திரேலிய பூர்வகுடி சமூகத்தின் வம்சாவளியைச் சேர்ந்த ஜேசன் கில்லஸ்பி, ஜனவரி 26ஆம் திகதி அனைவராலும் ஆஸ்திரேலிய தினமாக ஏற்றுக்கொண்டு அனுசரிக்கப்படும் தினமல்ல என்கிறார்.

“ஜனவரி 26 அன்று ஆஸ்திரேலிய தினம் கொண்டாடப்படுவதை பலர் ஆதரிக்கும்போது, ‘எப்போதும் ஜனவரி 26 தான்’ என்று அவர்கள் கூறுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இது உண்மையல்ல. வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் ஜனவரி 26 என்ற ஒரு திகதி மட்டுமே ஆஸ்திரேலிய தினமாகக் கொண்டாடப்பட்டதில்லை என்பது தெரியவரும்.

உண்மையில் ஜனவரி 26ஆம் திகதி மண்ணின் மைந்தர்களான பூர்வகுடி, ஆஸ்திரேலிய மக்களுக்கு ஆழமான உண்மையான துயர நாளாகும். இதை பூர்வகுடிகள் கொண்டாடக்கூடிய நாளாகக் கருதவில்லை. பெரும்பாலான மக்களுக்கு ஒரு துயரமான நாளாக ஜனவரி 26ஆம் திகதி இருக்கும்போது ஆஸ்திரேலிய தினமாக அனுசரிக்கப்பட மற்ற திகதிகள் இருக்கின்றன. அதாவது அனைவருக்கும் மகிழ்ச்சியான நாளாக, கொண்டாடப்படும் நாளாக பல நாட்கள் இருக்கின்றன.

எங்களது வலுவான பன்மைத்துவக்கலாசார வரலாறு கொண்ட நாட்டில், பலதரப்பட்ட பின்னணிகள் கொண்ட மக்கள் தொகுதியினர் வாழும் நாட்டில் ஏகப்பட்ட பூர்வகுடி கிரிக்கெட் வீரர்கள், விளையாட்டு வீரர்கள் இருந்திருப்பார்கள் என்றே நான் கருதினேன். அதனால் நான்தான் முதல் பூர்வகுடி கிரிக்கெட் வீரராக இருக்கமுடியாது என்று இத்தனை நாளாக வெள்ளந்தியாக நினைத்துக்கொண்டிருந்தேன்.” என்று ஜேசன் கில்லஸ்பி கூறியுள்ளார்.


XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146


ATOP IMPORTS
FLOORING
We Supply & Install all
Types of Flooring Products
Gloss Tiles
Matte Tiles
Carpets
Decking
Cladding
Vinyl
Hybrid Flooring
Solid Parquetry
Engineered Oak
Engineered Parquetry
0433071956
www.atopimports.au
U1/44 Princes Hwy, Eumemmerring VIC 3177


PRESERVATIVES NO ADDED
MONOSODIUM GLUTAMATE MSG NO ADDED
ATHAVAN
ஆதவன் ආතාවන්
PRODUCTS
PREMIUM PRODUCTS FROM
Jaffna
மிளகாய்த்தூள்
මිරිස් කුඩු
CHILLI POWDER
தானிய சத்துமாக்கலவை
ධාන්‍ය මිශ්‍රණය
CEREAL NUTRIENT MIXTURE
Exclusive Offer 100g + FREE 25g = 125g
மஞ்சள் தூள் කහ කුඩු
TURMERIC POWDER
வல்லாரை பிட்டுமா
CENTELLA PITTU FLOUR
FREE 50g = 250g
வறுத்த கறித்தூள்
බැදපු තුනපහ කුඩු
ROASTED CURRY POWDER
யாழ்ப்பாணத்து கறித்தூள்
යාපන තුනපහ කුඩු
JAFFNA CURRY POWDER
ATHAVAN ஆதவன் ආතාවන් PRODUCTS
Roasted
Jaffna
CURRY POWDER
WEIGHT
900g
PREMIUM Quality
prepared using
Traditional methods.
Distributed in Australia,
Sri Lanka, and other countries.
SRI AYYAPPA (PVT) LTD.
40 David St, Dandenong VIC3175
Australia.
+61 449 722 392 | +61 3 7049 9441
sriayyappa.ptyltd@gmail.com
SRI AYYAPPA GROUP (PVT) LTD.
Kaithady Weast, Kaithady, Jaffna,
Sri Lanka.
+94 74 158 3717
sriayyappa.lk@gmail.com
www.sriayyappa.com.lk